# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 1 செவ்வாய்க்கிழமை (13-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:78


# புலிகளை பிரிட்டன் அரசு தடைசெய்தால் நோர்வேயின் சமாதான முயற்சி குழம்பும்!

## விளக்குகின்றார் அன்ரன் பாலசிங்கம்

லண்டன்,பெப்ரவரி13

**"ஒரு முக்கியமான ஐரோப்பிய வல்லரசான பிரித்தானியா, இப்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடையை விதிக்குமானால் நோர்வேயின் நடுநிலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் கடுமையாகப் பாதிக்கப்படும்"**

**- புலிகள் இயக்கத்தின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் லண்டனில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'தமிழ் கார்டியன்' ஏட்டுக்கு வழங்கியுள்ள செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

"நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக பக்கபலமாக நிற்கும் பிரித்தானியா இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சுமூலம் பிரச்சினையைத் தீர்க்க ஊக்குவிக்க வேண்டும். அதைவிடுத்து ஒரு சாரார் மீது அபாண்டமான பழியைப் போட்டு அவர்கள் மீது பயங்கரவாதக் குற்றத்தைப் பிரித்தானிய அரசு சுமத்துமானால், அது தமிழரின் இனப்பிரச்சினையில் பாரபட்சமாக நிகழ்த்தப்பட்ட ஒரு தலையீடாகவே கருத இடமுண்டு. அத்தோடு நோர்வேயின் நடுநிலையில் எமக்குள்ள நம்பிக்கையையும் அது தகர்த்துவிடும்." இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியின் முழு விவரமும் வருமாறு:-

*கேள்வி:-* புலிகள் இயக்கத்துக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் மத்தியில் விரைவில் பேச்சு நடைபெறப்போவதாக கொழும்பு ஊடகங்கள் நம்பிக்கை ஊட்டும் செய்திகளைப் பிரசுரித்து வருகின்றன. இருதரப்பும் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கான புறச்சூழ்நிலையை நோர்வே நடுநிலையாளர்கள் உருவாக்கி உள்ளார்களா?

*பதில்:-* சமாதானப் பேச்சுகள் சம்பந்தமாக கொழும்பு ஊடகங்களில் பலவகையான ஊகங்கள் நிலவுகின்றன.

பேச்சுகள் தொடங்குவதற்கு இன்னும் நிறைய தயாரிப்பு வேலைகள் செய்யப்படவுள்ளன. நோர்வே அரசு பரிந்துரைத்த "புரிந்துணர்வு உடன்பாடு" இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாடாக இன்னும் முழுமை பெறவில்லை. இந்த உடன்பாட்டில் ஸ்ரீ லங்கா அரசு சில மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்திருப்பதாக நாம் அறிகின்றோம். அவற்றை நாமும பரிசீலனை செய்யவேண்டும். இந்த உடன்பாட்டைக் கண்காணிக்கும் சர்வதேசக் குழுவில் எந்தெந்த நாடுகளைத் தெரிவு செய்வது என்பது பற்றி தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கின்றோம். இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான கண் காணிப்புக் குழுவை தெரிவுசெய்ய நோர்வே முயன்று வருகிறது.

புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தப் பிரகடனம் செய்து அதனை மேலும் நீடித்துள்ளது. இந்தப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நோர்வேயின் புரிந்துணர்வு உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கடப்பாடுகளை நாம் செம்மையாகக் கடைப்பிடித்து வருகின்றோம். அதாவது தென்னிலங்கையில் சகல விதமான வன்செயல்களையும் நிறுத்தி இருக்கிறோம். எமது இந்த நல்லெண்ண முயற்சியை ஏற்றுக்கொண்டு சிங்கள அரசும் விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். அப்பொழுதுதான் இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்துவதற்கு ஏதுவான சமாதானப் புறநிலை தோன்றும்.

*கேள்வி:* பேச்சுக்கு முன்னராக போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட மாட்டாது எனவும் பேச்சுகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டால் போர்நிறுத்தம் பற்றிப் பரிசீலனை செய்யலாம் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தனது சுதந்திரதின உரையில் வலியுறுத்தியிருக்கின்றார். இந்த நிலைப்பாடு பேச்சுக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமையும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:* சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் சண்டை முழுமையாக நிறுத்தப்படவேண்டும் என்பதுதான் புலிகளின் நிலைப்பாடு.

போரும் வன்முறையும் தாண்டவமாடும் சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. ஆகவே தான் பேச்சுக்கு முன்னர் போருக்கு ஓய்வு கொடுப்பது அவசியமென நாம் வலியுறுத்தி

(2ஆம் பக்கம் பார்க்க)



## வழக்குப் போட 'சிஹல உறுமய' முயற்சி!

கொழும்பு,பெப்.13

விடுதலைப் புலிகள் அமைப்பைப் பிரிட்டன் தடை செய்யாவிட்டால், அந்த நாட்டு அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக சிஹல உறுமயவின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திலக் கருணரட்ன தெரிவித்தார்.

அரச சார்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதைத தெரிவித்துள்ளார். (உ-3)

## பிற நாடுகளிலும் புலிகள் மீது தடை விதிக்கச் செய்ய முயற்சி

கொழும்பு,பெப்.13

பிரிட்டனில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வைக்கும முயற்சியில் இலங்கை அரசு மும்முரமாக இறங்கியுள்ளது.

இதன் ஒரு நடவடிக்கையாக - வெளிநாடுகளுக்கு இது விடயத்தில் அழுத்தம் கொடுக்கும் வழிவகைகள் குறித்து 18 நாடுகளிலுள்ள தனது தூதர்களை இலங்கை அரசு கொழும்புக்கு அழைத்து அவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வெளிவிவகார

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பக் கட்டுப்பாட்டு முறை சிங்கள மக்களுக்கு வேண்டாம்

### வீரவிதான இயக்கம் கோரிக்கை

கொழும்பு,பெப்.13

யுத்தத்தில் மடியும் படையினரின இடத்தை நிரப்பும் விதத்தில், புதியவர்களைப் போர்முனைக்கு அனுப்ப வசதியாக சிங்கள மக்களிடையே குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கையைத் தளர்த்தவேண்டும்.

- மேற்கண்டவாறு அரசைக் கோரியுள்ளது வீரவிதான இயக்கம்.

தற்சமயம் நடத்தப்படும் யுத்தத்தில் ஆயிரக்கணக்கில் சிங்கள

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடை செய்வது குறித்து மக்களின் கருத்தை அறிந்தே முடிவு

### பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,பெப்.13

பிரிட்டனில் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்வதா என்பது குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்கள் பெறப்படும். அதன் பின்னரே முடிவு எடுக்கப்படும் என கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டனில் தடைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா எனக் கேட்டபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளைத் தடைசெய்வதா இல்லையா என்பது தொடர்பாக உள்துறை அமைச்சரே முடிவு செய்வார். புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பா என்பதை அவரே முடிவு செய்யவேண்டும்.

புலிகளைத் தடை செய்வதாயின நான்கு அம்சங்கள் ஆராயப்படவேண்டியுள்ளது.

1) அந்த இயக்கத்தின் தன்மை, நோக்கம், செயற்பாடு.

2) அந்த இயக்கத்தால் பிரிட்டனுக்கு ஏற்படும் அச்சுறுத்தல், பாதிப்பு.

3) அதன் வியாபகத் தன்மை, பரப்புரை.

4) சர்வதேச ரீதியாக அந்த இயக்கத்துக்கு எதிராகக் கிளம்பியுள்ள கருத்து எத்தகையது.

- இந்த நான்கு விடயங்களும் ஆராயப்பட்டே முடிவு செய்யப்படும்.

புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு சாராரும், தடைசெய்யவேண்டாம் என்று மற்றொரு சாராரும் கோருகின்றனர். மகஜர்களையும் அனுப்பி வருகின்றனர்.

புலிகள் தொடர்பாக பிரத்தியேக அமைப்புக்களிடமும் பொதுமக்களிடமும் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படும்.

இந்த விடயத்தில் பிரிட்டிஷ் தூதரகம் நடுநிலைமையாகவே செயற்படுகின்றது. - என்றார் அவர். (உ-3)

## ஜனாதிபதித் தேர்தல் வழக்கை ஐக்கிய தேசியக் கட்சி வாபஸ்

கொழும்பு,பெப்.13

1999 டிசெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து, தான் தாக்கல் செய்த வழக்கை ஐ.தே.கட்சி நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டது.

மேற்படி வழக்கு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் நடைபெற்றது.

அப்போது ஐ.தே.கட்சியின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக மனுதாரர் முன்வைத்த மூன்று குற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல் வேலைநிறுத்தத்தில் குதிக்க உதவி வைத்தியர்கள் முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.13

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் - பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று கோரி யாழ் குடாநாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்தியர்கள் நாளை முதல் வேலைநிறுத்தத்தில் குதிக்க உள்ளனர்.

இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்தியர்கள் சங்கத்தின் யாழ்.கிளையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கில் பணிபுரியும் பட்டதாரி மருத்துவ அதிகாரிகளுக்கும் பல் மருத்துவ அதிகாரிகளுக்கும் 01.01.2000 ஆம் திகதி முதல் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இக்கொடுப்பனவு உதவி மற்றும் பதிவு மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை. இது பாரபட்சமான நடவடிக்கையாகும்.

யாழ். பிராந்தியத்தில் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்திய நிலையங்களில் பெரும்பாலும் பதிவு மற்றும் உதவி வைத்தியர்களே கடமைபுரிகின்றனர்.

தற்போது மூன்று மாவட்ட வைத்தியசாலைகள், ஓர் ஆதார வைத்தியசாலை, நான்கு பிரதேச வைத்தியசாலைகள் உட்பட மத்திய மருந்தகங்கள், சிகிச்சை நிலையங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, திருகோணமலை. இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் - 2000

வடக்கு - கிழக்கு மாகாண எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டத்துக்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

1. நாவல் 2. சிறுகதை
3. கவிதை 4. நாடகம்
5. சிறுவர் இலக்கியம் 6. சமய இலக்கியம்
7. ஆய்வு இலக்கியம்
8. பல்துறை இலக்கியம்
   (அ) அரசியல் சமூக வரலாற்று வாழ்வியல் கட்டுரைகள் சம்பந்தமான விடயங்கள்
   (ஆ) விஞ்ஞான பொருளாதார மொழியியல் சம்பந்தமானது.

**விதிகள்:**

1. *ஓர் எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.*
2. *நூல்கள் 2000 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதிவரை அச்சில் வெளிவந்ததாக இருக்கவேண்டும்.*
3. *பங்குபற்றும் எழுத்தாளர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.*
4. *வேறு போட்டிகளில் ஏற்கனவே பரிசுபெற்ற நூல்களாக இருந்தால் போட்டிகளில் இருந்து நிராகரிக்கப்படும்.*
5. *போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.*

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் ஒவ்வொன்றிலும் நான்கு நான்கு பிரதிகள் அனுப்பவேண்டும். எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர்

**திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்**
**உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை**

என்ற முகவரியிட்டுப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**- க.பரமேஸ்வரன் (செயலாளர்).**

(C15267) *24. 01. 2001*

---

## இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

கொழும்புக் கிளைத் தலைவி

**திருமதி கனகம்மா ஆழ்வாப்பிள்ளை** அவர்களின்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலிக் கூட்டமும்

காலம் : நாளை (14.02.2001) புதன்கிழமை பி.ப. 2.30 மணி
இடம் : யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்
தலைவா : திருமதி சு.சிவஞானசுந்தரம் அவர்கள் (அதிபர்)


*பழைய மாணவர்கள் அனைவரையும் வருகை தந்து நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

- தலைவர். (84091) - செயலாளர்.

---

## 31 ஆம் நாள் நினைவலையும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்

தோற்றம் 1921 - 10 - 02



மறைவு 2001 - 01 - 14

அமரர்
### நாகமுத்துச் செட்டியார்
(பிரபல நாட்டுக் கூத்து அண்ணாவியார்)

*"ஈன்று புறந்தந்தாளும் இன்றில்லை*
*ஈரவிழிகள் காயுமுன்னே நம்மை*
*சான்றோராக்கி வாழ வைத்த எம்*
*அன்புத் தெய்வமும் சாய்ந்ததுவே!*
*நீங்காத நினைவலைகள் சுமந்து*
*ஏங்கும் நெஞ்சோடு ஐயா*
*ஏத்துகின்றோம் பாச தீபம்*
*மீண்டும் ஒரு பிறவி எடுத்து*
*ஈண்டு வந்து விடு எம்முடனே"*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இன்று (13.02.2001) செவ்வாய்க்கிழமை எம்மில்லத்தில் நடைபெற இருப்பதால் இந் நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைப்பதுடன் இவரது இறுதிக் கிரியைகள் வரை அனைத்து உதவிகளும் நல்கி, எம் துயரத்திலும் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் நன்றிகளை நவில்கின்றோம்.

திருமதி தியாகராசா தவமலர் (மகள்)
திரு.க.தியாகராசா J.P (மருமகன்)
மற்றும் குடும்பத்தினர்.

*ஆலடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(84089)

---

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றோம். சமாதானப் பேச்சுக்களில் எமது அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி இராணுவத் தளபதிகளும் பங்குபற்ற நேரிடலாம். எனவே இத்தகைய பேச்சுக்களுக்கு துப்பாக்கிகள் முழுமையாக மௌனமடையும் ஒரு சமாதானப் புறநிலை நிலவுவது அவசியம்.

இரு தரப்பினரும் சம்பிரதாயபூர்வமாகச் செய்துகொள்ளும் போர் நிறுத்த முறைமை பற்றி ஜனாதிபதி குமாரதுங்க குறிப்பிடுகின்றார் போலும். இவ்விதமான போர்நிறுத்த முறைமைகள், ஒழுங்குகள், கடப்பாடுகள் பற்றிப் பேச்சுக்களின்போது உடன்பாடு காணலாம். ஆனால் இப்பொழுது தேவைப்படுவது என்னவென்றால் இரு தரப்பினரும் தாக்குதல் நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்திக் கொண்டு அமைதியைப் பேணவேண்டும். பேச்சுக்கு முன்னோடியாக இந்த அமைதி நிலை அவசியம்.

புலிகள் கடைப்பிடித்துவரும் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தமும், நோர்வே அரசு சமர்ப்பித்துள்ள புரிந்துணர்வு உடன்பாடும் ஆக்கபூர்வமான முயற்சிகள். போர் நெருக்கடியைத் தணித்து, சமாதானச் சூழ்நிலையை உருவாக்கும் நல்லெண்ண முயற்சிகள். இந்த நல்லெண்ண முயற்சிகளை ஸ்ரீலங்கா அரசு உதாசீனம் செய்வது தவறு. இம்முயற்சிகளை வரவேற்று ஸ்ரீலங்கா அரசும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தால் போர்நிறுத்தமும் அதனைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களும் ஏற்படுவதற்கான சூழ்நிலை பிறக்கும்.

### செத்துப்போன ஆவணம்

*கேள்வி:* அரசாங்கம் கொண்டு வந்த புதிய அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளே பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையவேண்டும் என சந்திரிகா வலியுறுத்தி வருகிறார். திம்புக் கோட்பாடுகளே பேச்சுக்கு அடித்தளமாக இருக்கவேண்டும் என நீங்கள் கூறி வருகிறீர்கள். இந்த முரண்பாடான நிலைமையை எப்படிக் களைவது?

*பதில்:* சந்திரிகா அரசின் அரச

(11ஆம் பக்கம் பார்க்க)

வெகுவிரைவில் வெளிவருகிறது!
வளர்ச்சி-ம
புதிய புலமைப் பரிசில் வினாத்தாள்
அலகு ரீதியானது!
ஒவ்வொரு புதன்கிழமை தோறும்.
தேடித் தொகுத்த பகுதிகள்
இதனால்
நீங்களும் சித்தியடையலாம்.

லஷ்சுமி இணுவில்
பிரசாந்த், லைலா, வையாபுரி
நடித்த
பார்த்தேன் ரசித்தேன்
(றீல்ஸ்) காட்சிகள்:11.00, 2.30(பு.நே.)
(84095)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா
மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
16.02.2001 முதல்
கண்ணன் வருவான்
(C/15058)

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரபுதேவா-சரத்குமார்
ஜெயாசீல' நடித்த
பெண்ணின் மனதைத்தொட்டு
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15278)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 06 - 09 - 1910



இறப்பு 15 - 01 - 2001

அமரர்
### சிதம்பரப்பிள்ளை பெரியதம்பி
(நல்லையா)

எமது தந்தையார் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும்,

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது இதயங்கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (14. 02. 2001) புதன்கிழமை காலை 7 மணியளவில் நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய சுற்றாடலிலும், சபிண்டீகரணக் கிரியைகள் காலை 10. 30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தங்களனைவரையும் வருகை தந்து மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*"முருகனகம்"*
*காந்தி வீதி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(84085)

---

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## நெஞ்சம் மறந்திடுமோ?

மண்ணில் 21 - 03 - 1957



விண்ணில் 24 - 02 - 2000

### அமரர் கனகசபை நித்தியானந்தன்
(ஆனந்தன் - மடத்தடி, மாவிட்டபுரம்.)
திதி: அபர சஷ்டி (13.02.2001)

*பெயருக்கேற்ற புகழுடனே மண்ணினில் வாழ்ந்தாயையா*
*அயராத முயற்சியுடன் அன்பு மழை பொழிந்தாயே!*
*தயவிலாக் காலனுமைக் கவர்ந்துமே விட்டானே!*
*மழலைச் செல்வங்கள் தேடியே திரியுதையா!*
*ஆண்டொன்று போனாலும் நெஞ்சம் மறந்திடுமோ?*
*இறையருளை வேண்டியே இறைஞ்சுகின்றோம் நாமிங்கே.*

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

*காமாட்சி அம்பாள் கோயிலடி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

(84095)

---

## மரண அறிவித்தல்

### பெருமாள்பிள்ளை ஸ்ரீகிருஷ்ணன்
(முன்னாள் உத்தியோகத்தர் வன பரிபாலனத் திணைக்களம்)

ஊரெழு மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா பெருமாள்பிள்ளை - திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனாகிய ஸ்ரீகிருஷ்ணன் 09.02.2001 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புப் புதல்வர்களாகிய இலக்குமணவாணி, அகில்கர் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் திருமதி சிவனுமைச்செல்வி இராசப்பா (Newzealand), ஸ்ரீகாந்தன் (Canada), காலஞ்சென்ற கருணாநிதி, கிரிதரன் (Finland), பாலகுமார் (Canada), சிவகாமி சிவபாதம் (Colombo - இளைப்பாறிய ஆசிரியர் - வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ச.இராசப்பா (உத்தரவு பெற்ற நில அளவையாளர்), க.சிவபாதம் (பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2001) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

தகவல்:

32, 32nd Lane,
Wellawatte.

சு.சிவபாதம், ச.இராசப்பா
(மைத்துனர்கள்)

(84093)

# உதயன்

## தாமதத்தின் அர்த்தம்...

சமாதான இலக்கை அடைவதற்கான நல்ல சமிக்ஞைகளை அரசு காட்டுமானால், தற்போதைய அரசியல் வழியில் தொடர்ந்து செல்வதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் தம்மிடம் தெரிவித்ததாக, வன்னி சென்று திரும்பிய மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்தமை, தீர்வு – போர் விவகாரத்தில் முதலாவது திருப்பமாக அமைந்தது.

பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக புலிகள் ஒரு தலைபட்சமான போர் நிறுத்தத்தையும் அறிவித்தனர். அதனை இரண்டாவது மாதமாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

ஆயினும் அரசாங்கத் தரப்பில் இருந்து உருப்படியானது, கனதியானது என்று கூறுமளவுக்கு, இன்னும் சமாதானப் பேச்சுக்குச் சாதகமான சமிக்ஞை எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

இம் மாதம் நான்காம் திகதி ஜனாதிபதி ஆற்றிய சுதந்திர தின உரையில் —

விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து சாதகமான பதில் வந்திருப்பதாகவும் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தப் போவதாகவும் கூறினாரே அன்றி, வேறு தகவல்கள் எதனையும் உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை.

அரசு - விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான நல்லெண்ணத் திட்டமாக, நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தயாரித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்தனவே அன்றி, உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் இல்லை.

விடுதலைப்புலிகள் சமாதானத்தில் விருப்பமில்லாதவர்கள்; அரசியல் தீர்விலும் அதற்கான பேச்சுக்களிலும் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று அரசாங்கம் நீண்ட காலமாகக் கூறி வந்தது. அதே ஆட்சியாளர்கள் இப்போது விடுதலைப்புலிகளை நம்பமுடியாது என்ற தொனியில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து நல்ல சமிக்ஞை வந்து மூன்றரை மாதங்களாகின்றன. அரசாங்கம் இப்போதுதான் முக்கால் முழம் நகர்த்திக் காலடி வைத்துள்ளது. அதனையும் இன்னும் தாக்கமாகப் பதிக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தை குறித்துக் கூறிக்கொண்டிருக்க பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, ஆனையிறவைக் கைப்பற்றுவது குறித்துக் காலத்தை அளந்து கொண்டிருக்கிறார். பிரதமரின் திசை நோக்கியே அரச இயந்திரம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்று கூறுமளவுக்கு வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் கொழும்பு வந்து செல்கிறார்கள். மேலும் ஆயுத தளபாடங்களை வாங்குவதற்கு கடன் உதவிகளும் பெறப்படுகின்றன.

அரசாங்கம் இரண்டு தோணிகளில் கால் வைக்கும் போக்கையே கைக்கொள்வது புலப்படுகிறது. சமாதான முயற்சிகள் முன்னேறுவதில் உள்ள தாமதத்துக்கும் அதுவே காரணம்....!

## இந்துத்துவ அமைப்பின் தலையீட்டால்
# குஜராத் பூகம்ப உதவியில் மத ரீதியான பாரபட்சம்
## இஸ்லாமியர்கள் குற்றச்சாட்டு

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத்தில் நிவாரண உதவிகள் வழங்குவதில் மத ரீதியாகப் பாரபட்சம் காட்டப்படுவதாக முறையிட்டு இஸ்லாமியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

பூகம்ப மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளில் அரசு நிறுவனங்களும், தொண்டு அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன.

இந்த உதவிப்பணிகளில் மதரீதியாகப் பாரபட்சம் காட்டப்படுவதாகவும்—

தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படாமலிருப்பதாகவும் —

பாதிக்கப்பட்ட இஸ்லாமியர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் போஸ் நகரில் நிவாரணப் பணிகளில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமியர்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்

நிவாரண உதவிகளை வழங்குவதில் பங்கு வகிக்கும் ஆர்.எஸ்.எஸ். போன்ற தீவிர இந்துத்துவ அமைப்புகளே இஸ்லாமியர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதைத் தடுப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன

வெளிநாடுகள் வழங்கிய குறிப்பாக பாகிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகள் வழங்கிய உதவிகளைக் கூட தங்களுக்குத் தரவில்லை என்று பாதிக்கப்பட்ட இஸ்லாமியர் ஒருவர் கூறியதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில், மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி குஜராத்தில் நிவாரணப்பணிகள் பாரபட்சமின்றி சிறப்பாக நடைபெறுவதாக பாராட்டியுள்ளது முஸ்லிம்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா ஆட்சி நடப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# தஞ்சம்கோரி நுழைய முடியாத கோட்டையாகிறது ஐரோப்பா
## அகதிகளுக்கான தூதர் கவலை

சொந்த நாட்டில் இன்னல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி அடைக்கலம் கோரி வருபவர்களுக்கு எளிதில் நுழைய முடியாத கோட்டையாக ஐரோப்பா மாறிவருகின்றது.

இவ்வாறு அகதிகளுக்கான ஐ.நா. தூதர் லோக் லொம்பர் கவலை வெளியிட்டுள்ளார்.

சட்ட விரோதமான குடியேற்றங்களைத் தடுக்கவும்—

தஞ்சம்கோரி விண்ணப்பிப்பவர்களில் இடம்மாறி, வசதி வாய்ப்புகளைத் தேடுபவர்களைத் தவிர்க்கவும் —

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன.

சுவீடனின் ஸ்டக்ஹோமில் நடந்த ஐரோப்பிய நாடுகளின் நீதி மற்றும் உள்துறை அமைச்சர்கள் மட்டத்திலான சந்திப்பில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது

இதனைச் சுட்டிக்காட்டியே லொம்பர் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இதேசமயம், கடந்த ஆண்டு ஐரோப்பாவில் அடைக்கலம் கோரி விண்ணப்பித்த 3 லட்சத்து 90 ஆயிரம் பேரில 25 சதவீதமானவர்களை ஏற்றுக் கொண்டுள்ள பிரிட்டனின் உள்துறைச் செயலர் ஜக் ஸ்ரா, வசதி வாய்ப்புகளைத் தேடி நாடுகளை மாற்றுபவர்கள் குறித்து பிரிட்டன் இறுக்கமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (ஒ-7)

## நியூயோர்க்கில் செயற்படும்
# தலிபானின் அலுவலகங்களை மூடும்படி அமெரிக்கா உத்தரவு

வாஷிங்ரன், பெப். 13- அமெரிக்காவில், நியூயோர்க் நகரில் செயற்படும் தலிபான்களின் அலுவலகங்களை மூடிவிடும்படி கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான வெளிநாட்டுப் பிரிவின் தற்காலிகச் செயலர் அலெட் எஸ்தம் அமெரிக்காவுக்கான தலிபான் பிரதிநிதி அப்துல் ஹக்கிடம் இந்த முடிவைத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவரான ஒசாமா பின் லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்க அங்கு ஆளும் தலிபான் அமைப்பினர் மறுப்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எஸ்தர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க நாடுகள் இரண்டில் அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டது தொடர்பான விசாரணைகளுக்கு பின்லேடனை ஒப்படைகத் தலிபான்கள் மறுத்து வருவதால் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்திருப்பது தெரிந்ததே. (ஒ-7)

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத்தில் மீண்டும் நிலநடுக்கம்

புஜ், பெப். 13 குஜராத்தில் பூகம்பத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கஜ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 9 நிலநடுக்கங்கள் உணரப்பட்டதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இவற்றில் அதிகக்கூடிய அளவு கொண்ட நிலநடுக்கம் 4 ரிச்டேராகப் பதிவாகியுள்ளது.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி குஜராத்தில் ஏற்பட்ட மாபெரிய பூமியதிர்ச்சியின் பின்னர் ரிச்டேர் அளவுகோலில் 3 மேல் பதிவான நிலநடுக்கங்களின் எண்ணிக்கை 280 ஐத் தாண்டியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சிறிய அதிர்வுகளால் பாதிப்புக்கு உள்ளாகும் எனக்கருதப்பட்ட அடுக்குமாடிக் கட்டடங்களை இடித்துத் தரைமட்டமாக்கும் பணிகளை அகமதாபாத் மாநகராட்சி ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக 15 அடுக்குமாடிக் கட்டடங்கள் வெடிப்பொருள்களைப் பயன்படுத்தித் தகர்க்கப்பட்டன. (ஒ-7)

### உதயவாக்கு

துன்பப்படுகின்றவன்தான் வாழ்க்கையில் வெற்றி கொள்கின்றான்.

## அரிய வகை நண்டு இனம்

சிட்னி, பெப். 13 உலகில் மிகப் பெரிய நண்டு வகைகளில் ஒன்று ஆஸ்திரேலியாவின் தைமோர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

25 சென்ரி மீற்றர் அகலம் உள்ள இந்த நண்டு வகைக்கு 'துறவி நண்டு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

உலகில் உள்ள பெரிய நண்டு இனங்களில் இது 3 ஆவது ஆகும்.

## இந்தியா மீதான தடைகளை நீக்க நடவடிக்கை

வாஷிங்ரன் பெப். 13 இந்தியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளை முற்றாக நீக்குவதற்கு அமெரிக்க அதிபர் புஷ் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கான இந்தியத்தூதர் நரேஷ் சந்திரா, அமெரிக்க அமைச்சர் கொலின் பவுலை சந்தித்து இது தொடர்பாகப் பேச்சு நடத்தினார் (ஒ)

## பங்களாதேஷில் நிலநடுக்கம்

கெளகாதி, பெப், 13 இந்தியாவில் அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களின் எல்லையை ஒட்டியுள்ள பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதியில் லேசான நில நடுக்கம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் 30 வினாடிகள் நீடித்தது. ஆனாலும் சேதங்கள் எவையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## இந்தியாவில் ராட்டின விபத்தில் 3 பேர் பலி!

புதுடில்லி, பெப். 13 டில்லி அருகே சூரஜ்கோட்டில் கண்காட்சி விழாவில் வைக்கப்பட்டிருந்த ராட்சத ஊஞ்சல் ராட்டினம் மேலே எழும்பிய நிலையில் தலைகுப்புற விழுந்தது.

இந்த விபத்தில் இளம் தம்பதியும், ஒரு சிறுமியும் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

### உலக அரங்கில்

## அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள
# மூப்பனாருக்கு முக்கியத்துவம் தர ஜெயலலிதா முன்வந்துள்ளாராம்

சென்னை, பெப். 13 அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் மூப்பனாருக்கு முக்கியத்துவமும், கௌரவமும் வழங்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்வந்துள்ளார்.

அ.தி.மு.க.வின் மூத்த தலைவர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டணியில் அ.தி.மு.க.வுக்கு அடுத்த பெரிய கட்சி என்ற அங்கீகாரம் த.மா.க.வுக்கு வழங்கப்படும் என்றும் —

கூட்டணிக் கட்சிகளிடையே நடந்த பேச்சை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில், அ.தி.மு.க. 144 தொகுதிகளிலும், த.மா.க. 37 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று கூறப்படுகிறது.

பா.ம.க.-23, காங்கிரஸ்-15, இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும்-10, உதிரிக்கட்சிகளுக்கு-5 என்ற கணக்கில் மற்றைய தொகுதிகள் ஒதுக்கப்படலாம்.

இதில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனினும் இந்த ஒதுக்கீடுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படாது என்றே கருதப்படுகிறது.

தமிழகத்தில் த.மா.க.வும், காங்கிரஸும் இணைந்து மூன்றாவது அணியை உருவாக்கினால் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பாகிவிடும் என்பதாலேயே ஜெயலலிதா விட்டுக் கொடுக்க முன்வந்ததாகக் கருதப்படுகிறது. (ஒ)

### நாளை

மாசி 2

புதன்கிழமை

திதி: ஸப்தமி பின் இரவு 2.49 வரை.

நட்சத்திரம்: சுவாதி பிற்பகல் 3.14 வரை.

அமிர்தயோகம்: 5.03 — 6.33

ராகுகாலம்: 12.33 – 2.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# 36 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு நியமனக் கடிதங்கள்

தென்மராட்சி, பெப். 13

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 36 ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் தரம் 2:11க்கு பதவி உயர்வு வழங்கப்பட நியமனக் கடிதங்கள் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சுமலநாதன் அனுப்பி வைத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது நியமனக்கடிதங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-117)


இதோ!

**கொழுப்பு நீக்கிய பால் (SKIMED MILK)**

**விற்பனைக்கு**

எமது சங்கத்தில் சுத்தமான பசுப்பாலில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட கொழுப்பு நீக்கிய பால் விற்பனை செய்யப்படுகிறது. யாழ். நகரிலும் சூழவுள்ள கிராமங்களிலும் நேரடி விநியோகம் செய்கிறோம். தேவையானவர்கள் முற்கூட்டியே பதிவு செய்து பாலை உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

ஒரு லீற்றர் பாலின் விலை
ரூபா 14/- மட்டுமே.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/15218)



**பெண்களுக்கான மீன்பிடி தொழில் நுட்ப உதவியாளர் பயிற்சிநெறி-2001**

மேற்படி பயிற்சிநெறிக்குப் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவர விண்ணப்பப் படிவத்தை **20 - 02 - 2001**இற்கு முன் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பயிற்சி நெறி — இலவசம்
வயது எல்லை — 18 — 35
கல்வித் தகைமை — க. பொ. த. [சா/த]
காலம் — ஒன்றரை மாதம்

அதிபர்,
பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி,
372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/15261)


## ஓராண்டு நினைவு நாள்

மலர்வு 02 — 11 — 1988



உதிர்வு 25 — 02 — 2000

செல்வன்

**தர்மசேகரம் முகுந்தன்**

(உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவன்)

திதி:- 13-02-2001

வெள்ளைப் புறா ஒன்று
போனது கையில் வராமலே.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (84056)

# பசுக்கொலைகளைத் தடுத்து நிறுத்த ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணம்

## பசுவதைக்கு எதிராகப் பலரும் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ் மாவட்டத்தில் பசுக் கொலைகளை தடுத்து நிறுத்தும் நோக்குடன் சைவ குரு பீடங்கள், சிவாச்சாரியார்கள் மற்றும் இந்து சமய அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக்குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள சிவகுருநாத பீடம் வேதாந்த மடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தெய்வீக கலந்துரையாடலின் இறுதியிலே இந்த ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வேதாந்த மட பீடாதிபதி கந்தவேள் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பசுவதைக்கு எதிராகவும், புலால் உண்பதைக் கண்டித்தும் பலர் உரையாற்றினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தாஸ்தாகுரு பீடதிபதிமகாதேவக்குருக்கள், பண்டிதர்எஸ் செல்லத்துரை, புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவமகாலிங்கம், எஸ். சிவராசசர்மா, பேராசிரியர் குமாரவடிவேல், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சண்முகநாதன், ந. வி. மு. நவரத்தினம், தர்மதீபம் சிவலோகநாதன் ஆகியோர் உட்பட பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினார்.

புதிதாகக் கொல்களங்கள் அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் — இந்துக்கள் வாழும் பகுதிகளில் இறைச்சிக்கடைகள் அமைக்க வேண்டாம் என்றும் — ஆரம்பிக்கப்பட்டுள்ள இறைச்சிக் கடைகளை படிப்படியாக மூடச்செய்தல் வேண்டும் என்றும் —

மாநகரசபை, நகரசபைகள் பிரதேச சபைகளிடம் இந்த ஒருங்கிணைப்புக் குழுவினால் இது குறித்து கோருவது என்றும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய நல்லை ஆதீன முதல்வர் கூறியதாவது—

**பசுவின் அழுகுரல் நல்லதல்ல**

பசுவினுடைய அழுகுரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருப்பதினால் தான் இந்த நாட்டிலே பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே பசுக்களை நாங்கள் பாதுகாத்து நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வேதாந்த மட பீடாதிபதி தலைமையுரையின் போது கூறியதாவது:—

அந்நிய கலாசாரத்தினால் சைவ மரபு வழிகள் மாறி வருகின்றன. மேலை நாட்டவர்களின் நல்ல பழக்க வழக்கங்களைக் கைவிட்டு தீயனவற்றையே எமது மக்கள் பின்பற்றுகின்றனர்.

நாய்க்குப் போடுவதற்காக மாட்டிறைச்சியை ஒளித்து நின்று வாங்கிய காலம் போய் இன்று பகிரங்கமாக இறைச்சி வாங்கும் நிலைக்கு காலம் மாறி விட்டது.

பணம் சேகரிக்கும் நோக்குடன் ஒவ்வொரு இடங்களிலும் கொல்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடெங்கும் உள்ள உள்ளூராட்சி சபைகள் இந்தப் பசுக் கொலைகளுக்கு இடமளித்து வருகின்றன.

உள்ளூராட்சி சபைகளிடம் நேரடியாகச் சென்று கொல்களம் அமைக்கப்படுவதை நிறுத்துமாறு கோர வேண்டும்.

பசுவைக் கொன்றவர்கள், இதற்கு உடந்தையாக இருந்தவர்கள், பார்த்தவர்கள், அந்தச் சூழலில் வசிப்பவர்கள், நடமாடியவர்கள் அனைவருக்கும் நரகபோகத்திலே தண்டனை கிடைக்கும் என்று கூறினார்.

நா. வி. மு. நவரத்தினம் உரையாற்றும் போது கூறியதாவது:-

பால் கிடைக்கும் வரை பசுவில் இருந்து பயனைப் பெற்றுவிட்டு கொல்களத்துக்கு அனுப்புகின்றார்கள் இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

கைவிடப்படும் பசுக்களை பராமரிக்கக்கூடிய வகையில் ஒரு மையத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.

பசுத்தொழுவம், பசுப்பட்டி அமைத்து பசுக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் உடனடியாக நாம் ஈடுபட வேண்டும் என்று அவர் கூறினார். [க-5]

# உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு கடன் வழங்கி உதவுங்கள்!

## வலி. மேற்கு விவசாயிகள் கோரிக்கை

வலி. மேற்கு, பெப் 13

வலிகாமம் மேற்கு விவசாயிகள் உப உணவு பயிர்ச்செய்கைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் கடன் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும் போக நெற்செய்கையைத் தொடர்ந்து உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு கடந்த வருடங்களில் கடன் வழங்கப்பட்டது போல இந்த வருடமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினரும் தாமதிக்காமல் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கேட்டுள்ளனர்.

பெரும்போக நெற்செய்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள விவசாயிகள், உற்பத்திச் செலவைக்கூட இந்த வருடம் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறுகின்றனர்.

இந்நிலையில் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு பெரும் பண நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-175)

## இழப்பீட்டு அறிக்கை பெற முடியும்

தென்மராட்சி, பெப். 13

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் சாவகச்சேரி வர்த்தகர்கள் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் இழப்பீட்டு முறைப்பாட்டினை பதிவுசெய்து அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டிருப்பதால் —

இதுவரைபொலீஸ் அறிக்கை பெற்றுக் கொள்ளாத வர்த்தகர்கள் உடனடியாக தமது பதவுகளை மேற்கொள்ளுமாறு வணிகர் மன்றத் தலைவர் தா. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

(க-117)

## யாழ். தபாலகத்தில் கொடுப்பனவுகள்

யாழ் பிரதம தபாலகத்தில் பெப்ரவரி மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவுதொகை மற்றும் தொழுநோயாளர்களுக்கான உதவு தொகை, புற்றுநோய் உதவு தொகை போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தபின் பிரதம தபாலகத்தில் பொதுசன மாதாந்த உதவுதொகை பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

உரியவர்கள் காலம் தாழ்த்தாது தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (க-6)

## சேவைநலன் பாராட்டு விழா

குருநகர் பெப். 13

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் சேவை புரிந்து 60 வயதைப் பூர்த்தி செய்து இளைப்பாறிய ஏழு பணியாளர்கள், திணைக்கள நலன்புரிக் கழகத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்தச் சேவைநலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் கழகத் தலைவர் இ. நாகராஜா தலைமையில் நடைபெற்றது.

எஸ். எமிலியானுஸ் (பதவி நிலை உத்தியோகத்தர்), பி. திசநாயகம் (பிரதம எழுதுநர்), க. பரமசிவம் (ஆவண அறைக்காப்பாளர்), டி. ஆர். அருமைநாயகம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் — ஆங்கிலம்) க. செல்வம் (காவலாளி), எஸ். ஜெகநாதன், க. சோமாஸ்கந்தன் (சேவைக்கால ஆலோசகர்கள்) ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர். (க-51)

# சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு; மாணவர்கள் மத்தியில் போட்டி

சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் பல போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்க வலிகாமம் கல்வி வலயம் ஏற்பாடு செய்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் இடையே மேற்படி விடயம் தொடர்பான கதை கூறல், சிறுகதை எழுதல், நாடகம் போன்ற போட்டிகள் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் தமது விண்ணப்பங்களை நாளை 14 ஆம் திகதிக்கு முன்பாக தத்தம் பகுதி கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் இம் மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-152)

# பிரிட்டனின் தடை முடிவை அடுத்தே சமாதானப் பேச்சின் அடுத்த நகர்வு

கொழும்பு,பெப்.13

விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் தடைசெய்யுமா, இல்லையா என்பது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின்பே நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் சாத்தியம் உள்ளதாக அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அதேசமயம் புலிகளைப் பிரிட்டன் தடை செய்யும் விவகாரமும், நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முயற்சிப்பதும் வெவ்வேறான விடயங்கள் என்று இலங்கை அரசு வலியுறுத்தி வருகிறது.

ஆனால், பிரிட்டன் தமது அமைப்பைத் தடை செய்யுமானால் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தாங்கள் விலகிக்கொண்டு விடுவோம் என்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஜூனில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தை இம்மாத இறுதியில் பிரிட்டன் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இச் சட்டத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகளை அந்நாடு தடை செய்யுமானால் பேச்சுவார்த்தையில் இருந்து தாங்கள் விலகிவிடுவோமெனப் புலிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

### சர்வதேச சமூகத்தின் ஆர்வம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் ஆர்வம் காட்டி வருகின்றது. இந்நிலையில் பிரிட்டன் புலிகள் அமைப்பைத் தடை செய்யாமல் விடுவதன் மூலமே சமாதானத்திற்கான முன் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியுமெனப் புலிகள் அமைப்பு கூறுகின்றது.

### அரச தரப்பு குற்றச்சாட்டு

ஆயினும் பிரிட்டன் தடை செய்யாமல் தடுப்பதற்கான கவசமாக நோர்வேயின் சமாதான முயற்சியைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இலங்கை அரச தரப்பில் காணப்படுகிறது. இதனை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது இவ்வாறிருக்க பிரிட்டன் தயாரிக்கவிருக்கும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகளை உள்ளடக்குவதா இல்லையா என்பது குறித்துப் பிரிட்டனின் அபிப்பிராயம் என்ன என்று கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரிட்டிஷ் பிரதி உயர்ஸ்தானிகர் மார்ட்டின் கில்லிடம் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கையில் சகல தரப்பினரும் தெரிவிக்கும் கருத்துக்களை லண்டனுக்குத் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிலர் புலிகளைத் தடை [illegible] வேண்டும் எனக் கூறுகிறார்கள். [illegible] சிலர் எதிர்க்கிறார்கள். இவை எல்லாவற்றையும் நாம் அறிக்கையாகச் சமர்ப்பித்திருக்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

### வெளிவிவகார அமைச்சரே முடிவு

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ரொபின் குக்கே இந்த விடயம் தொடர்பாக முடிவு எடுப்பார்.

பயங்கரவாத அமைப்புகளின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 19 ஆம் திகதியே வெளியிடப்பட வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. முன்னரோ பின்னரோ இத்தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)



மீனவர் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்கும் முகமாக மானிப்பாய்த் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பிரதேச 0சபைத் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் 'டிஸ்கோ' மீன்பிடி வலைகளை அண்மையில் வழங்கினார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம். அருகில் பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டரும் காணப்படுகின்றார். (ஐ-185)

# ஆயிரம் பாட்டுக்களை எழுதலாம் ஆனால் கவிதை வடிப்பது சுலபமல்ல!

## நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

தென்மராட்சி,பெப்.13

இலக்கியத்தின் தாயாக வர்ணிக்கப்படுவது கவிதையாகும். கவிதையின் ஓசை நயம் இதயத்தில் இருந்து உருவாகின்றது. பாட்டுக்கள் ஆயிரம் எழுதலாம் ஆனால் ஒரு கவிதையை வடிவமைப்பது சுலபமல்ல. கவிஞனின் உள்ளத்தில் உருவாகும் கவிதைகள் காலத்தால் அழிக்க முடியாதவை.

நாவற்குழியூர் இலட்சுமணனின் கவிதை வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் தெணியான் மதிப்பீட்டுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கலாசார மண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

விழாவில் தெணியான் தொடர்ந்து உரையாற்றிய போது கூறியதாவது:

இலக்கிய உலகத்திற்கு புதிய கவிஞன் ஒருவன் கிடைத்துள்ளான் என்றே கூறவேண்டும். இந்த இளம் வயதில் சிறந்த கவிதைத் தொகுதி நூலை வெளியிட்டு இலக்கிய உலகுக்கு பெரும் பணியாற்றியது கண்டு வியப்படைகிறேன். இலக்கிய உலகம் மனமுவந்து வரவேற்று இவரின் பணியை ஊக்குவித்து மேன் மேலும் பல கவிதை நூல்களை இலககிய உலகுக்கு வழங்கச் செய்ய வேண்டும்.

சமூகத்தில் எழும் பிரச்சினைகளை கவிதைகளில் விளங்கக் கூடிய வகையில் இவர் எழுதியுள்ளார். இனப பிரச்சினை, வறுமை மற்றும் சமூகப் பிரச்சினை, பெண்கள், ஏழைகள் ஆகியவற்றின் தன்மைகள் குறித்து கவிதைகளாக வடித்துள்ளமை நூலாசிரியரின் கவிதை ஆற்றலை மேம்படுத்தியுள்ளது - என்றார்.

இவ்விழாவில் டாக்டர் எஸ். யோகேஸ்வரதேவர், குப்பிளான் ஐசணமுகன், ஆசிரியர் ஆ.கந்தையா உட்பட பலர் உரையாற்றினர். (க-117)



ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சுய தொழில் ஊக்குவிப்புக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ரீ.சிவதெட்சணாமூர்த்தி உரையாற்றுவதையும் அருகில் தியாகராசா ம.ம. வித்தியாலய அதிபர் சு.வேலாயுதபிள்ளை, இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ஞா.செந்தமிழ்ச் செல்வன் மற்றும் மாவட்ட கைத்தொழில் விரிவாக்க அலுவலர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-73)

## நீர்வேலிப் பகுதியில் திருடர்கள் கைவரிசை

அரியாலை,பெப்.13

நீர்வேலி தெற்குப் பகுதியில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள நேரங்களில் திருடர்கள் வீட்டுக்கூரை வழியாகவும் ஜன்னல் கள உடைத்தும் உட்சென்று பெறுமதி மிக்க பொருள்களை அபகரித்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு நீர்வேலி கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் உள்ள மூன்று வீடுகளில் இரவு நேரம் திருடர்கள் ஜன்னல்களை உடைத்து சைக்கிள்கள் மற்றும் பெறுமதி மிக்க உடுபுடைவைகளை எடுத்துச் சென்றுள்ளனர். (க-17)

## ப.நோ.கூ.சங்கத்தின் புதிய லொறி சேவைக்கு

தென்மராட்சி. பெப்.13

18 இலட்சம் ரூபாவில் புதிதாக உருவடிவமைக்கப்பட்ட சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் லொறி கடந்த ஞாயிற்றுக்கிழமை சேவைக்கு விடப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையினால் இச்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரவெட்டி அத்துளு அம்மன் கோயிலடியில் சங்கத் தலைவர் செ. சுப்பிரமணியம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

இந்த லொறி கொள்வனவுக்கு 13 லட்சம் ரூபாவை வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திறைசேரியிலிருந்து கடனாகப் பெற்றுக் கொடுத்துள்ளார். (ஐ-86)

## நாவற்குழியில் கைதான 7 பேரும் காங்கேசனில்

தென்மராட்சி, பெப்.13

தென்மராட்சி பிரதேசத்தில் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது படையினரால் கைது செய்யப்பட்ட ஏழு பேரும் காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தடுத்து வைகக்கப்பட்டுள்ளதாக அங்கு சென்று திரும்பிய மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். பிரதிநிதி தெரிவித்தார்.

இவர்களது கைது தொடர்பாக வன்னியல் உள்ள உறவினர்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# தென்மராட்சியில் படையினர் மீட்ட எண்பது சைக்கிள்கள்

## உரியவர் அடையாளம் காட்டிப் பெறலாம்

யாழ்ப்பாணம்,பெப்.13

தென்மராட்சிப்பகுதியில் இருந்து பொது மக்கள் இடம்பெயர்ந்த போது கைவிடப்பட்ட 80 சைக்கிள்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு 52 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சைக்கிள்களின் உரிமையாளர்கள் தங்களது சைக்கிளுக்குரிய பற்றுச் சீட்டினையோ அல்லது சைக்கிள் இலக்கத்தையோ வரணியில் இயங்கும் 52 ஆவது படையணியின் அலுவலகத்தில் காட்டி தமது சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு படை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ஐ-6)

# வாசகர் திருமுகம்

## மாநகர சபை ஊழியர்களின் செயல் வேதனையளிக்கின்றது

வீதியோரத்தில் என்னால் நட்டு வளர்க்கப்பட்ட மரக்கன்றை கடந்த 2001.02.05 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, மூன்றாம் ஒழுங்கையில் துப்பரவுப் பணியில் ஈடுபட்ட யாழ்.மாநகர சபை ஊழியர்கள் பிடுங்கி எறிந்து விட்டார்கள்.

இந்தக் கைங்கரியம் மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் வழிகாட்டலிலேயே நடைபெற்றது. இது வேதனையளிக்கிறது.

இந்தச் செயலின் நோக்கமென்ன..?..? வெருக்கும் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் ஓரமாகவே அந்தக் கன்று நடப்பட்டிருந்தது. இது இடைஞ்சல் என்று கருதினால், இக் கன்று நடப்பட்ட இடத்திலிருந்து சுமார் 30 யார் தொலைவில் வானளாவ ஓங்கி நிமிர்ந்து நிற்கும் இலுப்பை மரத்தை மாநகர சபை இதுவரை ஏன் தறிக்கவில்லை?

பக்கத்திலுள்ள (ஆரிய) குளத்தில் நுளம்பை அதிகம் பெருக்கச் செய்யும் ஆகாயத்தாமரையை நீக்கிவிடுமாறு அயலில் வாழும் அநேகர் கையொப்பமிட்டு இரு தடவை கடிதங்கள் அனுப்பினோம். அதற்கு நடவடிக்கை இல்லை. நான் நேரில் சென்று பேசியும் பயன் இல்லை.

இரவும், பகலும் நுளம்புத் தொல்லைக்குள் வாழும் எமக்கு உதவ முடியாத, மாநகர சபை ஒரு மரக்கன்றைப் பிடுங்கி எறிந்து 'சாதனை' புரிந்து விட்டது.

மரங்களைக் கண்டபடி தறிப்பதால் ஏற்படும் விளைவுகளை நாம் இப்போது அனுபவித்துவருகிறோம். அதனை எவரும் மறுக்க முடியாது.

யாழ்.மாவட்டம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திற்குக் கீழ் இருந்த காலத்தில் மரங்களை நடும்படி கருத்தரங்குகளோடு மட்டும் நின்றுவிடாது மரக்கன்றுகளை விநியோகித்து அவர்களும் நட்டு அந்தப் பணியை ஊக்குவித்தார்கள்.

கண்டபடி தறிப்போருக்கு தண்டனையும் வழங்கினார்கள்.

இப்போது நிலைமை என்ன...?

முன்னைய கால நிகழ்வுகளை நினைக்கும் போது மாநகர சபையின் செயல் வேதனையளிக்கின்றது.

வீதியோரத்தில் யார் மரம் நட்டாலும் அதன் பயனை வெரும் பெற முடியாது என்பதனையும் அது மாநகர சபைக்குச் சொந்தமானது என்பதனையும் நானறிவேன். எனவே இந்த நோக்கம் கருதியும் மரக்கன்றை நட்டு வளர்க்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*3ஆம் ஒழுங்கை பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.* - **சா.வ.தயாநிதி.**

## சிலரின் சிரமங்களுக்காக பாடசாலை நிர்வாகத்தை சாடுவது சரியல்ல

கடந்த 24.01.2001 உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகத்தில் "சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனின் ஆதங்கம்" என்ற தலைப்பில் வெளியாகி இருந்த விடயம் குறித்து எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

நானும் சாகச்சேரி இந்து மாணவன்தான். இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டையில் இருந்து இணுவிலுக்குச் சென்று வருகிறேன். எமது பகுதியாகிய வலிமேற்கிலிருந்து மாணவர்கள் பலர் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் நீண்ட நேரம் பஸ்ஸுக்கு காத்துநின்று பயணிக்கின்றனர்.

இதற்கு முன்னர் இரண்டு பஸ்கள் எடுத்து வந்ததும் உண்டு.

எமது பாடசாலை மானிப்பாய்ப் பகுதிக்கு இடம் மாறுமானால் பலருக்கும் வசதி. பாடசாலையும் காலையில் இயங்கும்.

மேலும் இடம்பெயர்வின் பின் எமது பாடசாலையை இயங்க வைக்க நிர்வாகம் பெரும் பிரயத்தனப்பட்டது. பல தடைகளையும் தாண்டித்தான் இணுவிலில் - அதுவும் மாலை நேரத்தில் இயக்கி வருகின்றனர். இதற்கு நாம் நன்றிகூற வேண்டியவர்களாகவே இருக்க வேண்டும்.

அதை விடுத்து ஒரு சிலருக்கு ஏற்படும் சிரமங்களுக்காக நிர்வாகத்தைச் சாடுவது சரியல்ல!

*வட்டுக்கோட்டை.* - **இந்துவின் மைந்தன்.**

## தட்டெழுத்தாளர் பரீட்சை முடிவுகள் தாமதமாவது ஏ[illegible]

அரச சேவை தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வத[illegible] பொதுப் போட்டிப் பரீட்சை - 1999 ஆம் ஆண்டு வர்த்தமானி[illegible] வெளியிடப்பட்டதன் பிரகாரம் விண்ணப்பித்து கடந்த 2000-03-25 அன்[illegible] பரீட்சையும் நடந்தது.

தற்போது பத்து மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை.

அத்துடன் யாழ்குடாநாட்டில் வேலை பெற்றுக்கொள்வது கல்லில் நார் உரிப்பது போலாகும் என்கின்ற நிலையில் இவ்வாறான பெறுபேறுகள் வெளியிடத் தாமதமாவது இன்னும் எம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் குறிப்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் துரித கதியில் உரிய அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா?

*பாதிக்கப்பட்டவர்களின் சார்பில்*

*நவாலி, வடக்கு.* **சி.என்.ஹெய்ன்ஸ்**


# மாலை ஆறு மணி வரை பஸ் சேவை நீடிக்கப்படும்

முளாய்,பெப்.13

யாழ்.நகரில் இருந்து குடா நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தினமும் மாலை ஆறு மணி வரை பஸ் சேவைகளை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலம் வரை யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு மாலை ஆறு மணிக்கு வந்து சேரும் பயணிகள் புறநகர்ப் பகுகளுக்குச் செல்ல முடியாமல் அவதியுறுவது வழக்கம். இதனால் தினமும் மாலை ஆறு மணிவரை புறநகர்ப்பகுதிகளுக்கான பஸ் சேவையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரி கருத்து வெளியிடும்போதே மேற்படி தகவலை வெளியிட்டார். (ஐ-99)

## இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி



தோற்றம் 19 - 05 - 1949

மறைவு 06 - 02 - 1999

அமரர்

**சின்னத்துரை கனகரத்தினம்** அவர்கள்

(காங்கேசன்துறை)

திதி: 13-02-2001

**தோள் மீது சுமந்தெமக்கு தொட்டிலாய் மாறிநின்று**
**கால் மீது ஊசிபட்டால் கண்ணெலாம் நீராய்ச்சிந்தி**
**பால் பழம் தேடித்தந்து பசியெலாம் போக்கிவைத்து**
**பூவினைப் போல எம்மைப் புனிதமாய் பேணிநின்ற**
**தாய் மனக் கோயிலெங்கள் குடும்பத்தின் குலவிளக்கு**
**சின்னத்துரையார் மைந்தன் அன்புச் சிகரமாம்**
**கனகரத்தினம் வானிடைச் சென்ற ஆண்டு**
**இரண்டினை நினைவுகூர்ந்து**
**பூவினைச் சொரிந்து அந்தப் பொன்னடி போற்றிநிற்போம்.**

*இல.60, பொற்பதி றோட்,*
*கொக்குவில்.* (84039)

அன்போடு அஞ்சலிக்கும்
மனைவி, மக்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்



அமரர்

**ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

தோற்றம் 1932-08-15

மறைவு 2001-01-14

...பின் சிகரமே! பண்பின் உறைவிடமே!
...த்துடன் எமை வளர்த்து பல்கலையும் பெறவைத்தீரே!
...ங்களொன்று சென்றதையா எங்களை நீர் பிரிந்து.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியை இன்று (13.02.2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
*37/A, வளாக வீதி,*
*திருநெல்வேலி.* (84061)

நிரந்தர முகவரி:
*91, சுப்பிரமணியம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.13

இம்மாதம் 11ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(176832ஏ), (178668ஏ), (178668பி), (178668சி), (178668டி), (179263ஏ), (179271ஏ), (179271பி), (179271சி), (179271டி), (179293பி), (179293சி), (179376ஏ), (179376பி), (179376சி), (182592ஏ), (182608ஏ).

**சாவகச்சேர**

(146025ஏ), (150982ஏ), (150982பி), (150982சி), (150982டி), (150982ஈ).

**கரவெட்டி**

(155004ஏ), (155004பி), 158106ஏ), (160137ஏ), (160137பி), (160137சி), (162162ஏ), (162162பி), (162163ஏ), (162163பி), (162163சி), (162271ஏ), (162271பி), (164694ஏ), (164694பி), (164694சி), (164857ஏ), (164857பி), (164857சி), (164860ஏ), (164947ஏ), (164947பி), (165073ஏ), (165077ஏ), (165280ஏ), (165280பி), (167223ஏ), (167226ஏ), (167226பி), (169577ஏ), (169577பி), (169577சி), (172192ஏ), (172192பி), (172192சி), (172396ஏ), (172396பி), (172396சி), (172396டி), (172451ஏ), (172452ஏ), (172452பி), (172573ஏ), (172573பி), (172573சி), (174395ஏ), (176037ஏ), (176058ஏ), (176058பி), (176058சி), (176096ஏ), (176096பி), (176097ஏ), (176097பி), (176145ஏ), (176220ஏ), (176243ஏ), (176243பி), (176243சி), (176243டி), (176243ஈ), (176354ஏ), (176423ஏ), (176502ஏ), (176502பி), (176508ஏ), (176508பி), (177581ஏ), (177581பி), (177581சி), (177608ஏ).

**கோப்பாய்**

(152280ஏ), (152280பி), (154465ஏ), (154465பி), (154533ஏ), (154533பி), (154533சி), (159640ஏ), (154640பி), (163662ஏ), (163669ஏ), (163669பி), (163669சி), (163689ஏ), (163692ஏ), (163705ஏ), (163705பி), (163724ஏ), (163776ஏ), (163776பி), (163776சி), (163787ஏ), (163794ஏ), (163794பி), (167093ஏ), (167093பி), (167093சி), (168188ஏ), (168188பி), (168188சி), (168190ஏ), (168190பி), (168190சி), (168190டி), (168241ஏ), (168241பி), (168241சி), (168253ஏ), (168289ஏ), (168289பி), (168289சி), (168289டி), (168299ஏ), (168299பி), (168302ஏ), (168302பி), (168309ஏ), (168309பி), (168345ஏ).

**மருதங்கேணி**

(176306ஏ), (176306பி), (176306சி), (177554ஏ), (177554பி), (177556ஏ).

**நல்லூர்**

(175196ஏ), (175196பி), (175196சி), (175196டி), (175196ஈ), (179058ஏ), (179058பி), (179187ஏ), (181618ஏ), (182638ஏ), (182638பி), (182716ஏ), (182716பி), (182716சி), (182812ஏ), (182841ஏ).

**பருத்தித்துறை**

(122229ஏ), (122229பி), (122229சி), (142664ஏ), (158080ஏ), (162239ஏ), (162239பி), (164431ஏ), (164431பி), (164431சி), (164431டி), (164431ஈ), (164795ஏ), (164795பி), (164795சி), (164795டி), (167314ஏ), (172199ஏ), (172199பி), (174323ஏ), (174323பி), (174323சி), (174323டி), (174670ஏ), (174670பி), (174670சி), (174670டி), (176251ஏ), (176251பி), (176251சி), (176251டி), (176345ஏ), (176345பி), (176345சி), (176358ஏ), (176358பி), (176358சி), (177544ஏ), (177544பி), (177606ஏ), (177606பி), (177606சி), (177606டி), (177632ஏ), (177632பி), (177648ஏ), (177648பி), (177648சி), (177648டி), (177648ஈ), (177648எவ்) (177686ஏ), (177716ஏ), (177716பி).

**சண்டிலிப்பாய்**

(169190ஏ), (179457ஏ), (179493ஏ), (179493பி), (181463ஏ), (181463பி), (181463சி), (181571ஏ), (181571பி), (181577ஏ), (181593ஏ), (181593பி), (181623ஏ).

**தெல்லிப்பழை**

(179308ஏ), (179308பி), (167308ஏ), (167308பி), (167308சி), (167308டி),

**உடுவில்**

(178766ஏ), (178892ஏ), (178892பி), (180667ஏ), (181437ஏ), (181437பி), (181582ஏ), (181628ஏ), (181639ஏ), (182616ஏ), (182616பி), (182668ஏ), (182859ஏ), (182859பி), (182859சி), (182859டி).

**சங்கானை**

(171156ஏ)

**சாவகச்சேரி**

(171189ஏ) (158309ஏ) (164494ஏ)
(164544ஏ) (177622ஏ) (177622பி)
(177623ஏ) (177623பி)

**யாழ்ப்பாணம்**

(171148ஏ) (171166ஏ) (171174ஏ)
(171180ஏ) (171181ஏ)

**கரவெட்டி**

(171151ஏ) (171152ஏ) (146070ஏ)
(146645ஏ) (146645பி) (148424ஏ)
(148424பி) (158091ஏ) (158091பி)
(158091சி) (158091டி) (164744ஏ)
(164744பி) (164744சி) (164744டி)
(164825ஏ) (165181ஏ) (165181பி)
(165181சி) (165181டி) (165181ஈ)
(165384ஏ) (165384பி) (165396ஏ)
(165396பி) (165396சி) (165396டி)
(165396ஈ) (169593ஏ) (169593பி)
(169593சி) (169718ஏ) (174420ஏ)
(174422ஏ) (174422பி) (174441ஏ)
(174605ஏ) (174605பி) (176062ஏ)
(176069ஏ) (176121ஏ) (176121பி)
(176229ஏ) (176261ஏ) (176263ஏ)
(176263பி) (176263சி) (176263டி)
(176295ஏ) (176295பி) (176295சி)
(176342பி) (176373ஏ) (176392ஏ)
(176392பி) (176467ஏ) (176467பி)
(176467சி) (176493ஏ) (176493பி)
(177535ஏ) (177535பி) (177576ஏ)
(177584ஏ) (177584பி) (177584சி)
(177584டி) (177584ஈ) (177584எப்)
(177645ஏ) (177645பி) (177645சி)
(177645டி) (177645ஈ) (177645எப்)
(177676ஏ) (177676பி) (177708ஏ)
(177708பி) (177708சி) (177708டி)
(177708ஈ) (177719ஏ) (177720ஏ)
(177728ஏ) (177741ஏ) (177741பி)
(177741சி) (177785ஏ) (177728ஏ)

**கோப்பாய்**

(153113ஏ) (163799ஏ) (163799பி)
(163799சி) (170445ஏ) (170445பி)
(170503ஏ) (170503பி) (170531ஏ)
(170531பி) (170531சி) (170531டி)
(170572ஏ) (171170ஏ) (171179ஏ)
(173247ஏ) (173267ஏ) (173267பி)
(173283ஏ) (173328ஏ) (173328பி)
(173328சி) (173328டி) (173346ஏ)
(173346பி) (173346சி) (173346டி)
(173346ஈ) (173346எப்) (173375ஏ)
(173375பி) (173397ஏ) (173397பி)
(177344ஏ) (177358ஏ) (177358பி)
(177409ஏ) (177409பி) (177421ஏ)
(177421பி) (177421சி) (177421டி)
(177421ஈ) (177467ஏ) (177467பி)
(177467சி) (177505ஏ) (177505பி)
(177506ஏ) (177506பி) (177507ஏ)
(177507பி) (179522ஏ) (179522பி)
(179522சி) (179522டி) (179522ஈ)
(179554ஏ) (179655ஏ) (179681ஏ)

(179683ஏ) (179865ஏ) (179865பி)
(179865சி) (179865டி) (180644ஏ)
(180644பி) (180655ஏ) (180655பி)
(180665ஏ) (180665பி) (180698ஏ)
(180698பி) (180698சி) (180716ஏ)
(180718ஏ) (180727ஏ) (180727பி)
(180748ஏ) (180748பி) (180761ஏ)
(180775ஏ) (180807ஏ) (180833ஏ)
(180833பி) (180883ஏ) (180883பி)

**நல்லூர்**

(162829ஏ) (162829பி) (162829சி)
(170676ஏ) (170723ஏ) (171133ஏ)
(171134ஏ) (171135ஏ) (171136ஏ)
(171138ஏ) (171139ஏ) (171140ஏ)
(171141ஏ) (171142ஏ) (171143ஏ)
(171145ஏ) (171146ஏ) (171147ஏ)
(171149ஏ) (171150ஏ) (171153ஏ)
(171155ஏ) (171157ஏ) (171158ஏ)
(171159ஏ) (171160ஏ) (171161ஏ)
(171162ஏ) (171164ஏ) (171167ஏ)
(171168ஏ) (171169ஏ) (171172ஏ)
(171173ஏ) (171173பி) (171173சி)
(171176ஏ) (171177ஏ) (171178ஏ)
(171182ஏ) (171197ஏ) (171300ஏ)
(171588ஏ) (171589ஏ) (171590ஏ)
(171592ஏ) (171598ஏ) (174176ஏ)
(174176பி) (174176சி) (177154ஏ)
(177169ஏ) (177171ஏ) (177171பி)
(177172ஏ) (177173ஏ) (177173பி)
(177173சி) (177176ஏ) (177182ஏ)
(177185ஏ) (177189ஏ) (177190ஏ)
(179619ஏ) (179619பி) (179619சி)
(179619டி) (179631ஏ) (179631பி)
(179631சி) (179647ஏ) (179647பி)
(179649ஏ) (179654ஏ) (179654பி)

**பருத்தித்துறை**

(143636ஏ) (143636பி) (143636சி)
(161992ஏ) (164471ஏ) (164750ஏ)
(164782ஏ) (165013ஏ) (169666ஏ)
(169666பி) (169666சி) (169666டி)
(172498ஏ) (172498பி) (172629ஏ)
(176201ஏ) (176207ஏ) (176207பி)
(176374ஏ) (176374பி) (176374சி)
(176509ஏ) (176510ஏ) (177240ஏ)
(177534ஏ) (177534பி) (177626ஏ)
(177626பி) (177662ஏ) (177688ஏ)
(177694ஏ) (177696ஏ) (177696பி)
(177731ஏ)

**உடுவில்**

(171137ஏ) (171163ஏ) (171165ஏ)
(171199ஏ) (177203ஏ) (177255ஏ)
(177297ஏ) (177297பி) (179577ஏ)
(179577பி) (179589ஏ) (179595ஏ)
(179595பி) (179610ஏ) (179610பி)
(179629ஏ) (179629பி) (179636ஏ)
(179636பி) (179636சி) (179556ஏ)
(179556பி) (179674ஏ) (179678ஏ)
(179688ஏ) (179688பி)

(க-10)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் அகஸ்ரின் அருளப்பு**

(ஓய்வுபெற்ற அதிபர்)

மலர்வு 1922-11-02

உதிர்வு 2000-02-13

பாசத்துடனும் பண்புடனும்
எமை வளர்த்து
எமது உயர்விற்காய் உழைத்த அப்பாவே!
நீங்கள் எம்மோடு இல்லாமல்
அனுதினமும் கலங்கி நிற்கின்றோம்
உம் ஆதரவும் துணையுமின்றி
நித்தம் நாம் தவிக்கின்றோம்
இறைவனின் பிரசன்னத்தை
மகிழ்வோடு சுவைக்கின்றீர்கள்
என்ற நம்பிக்கையோடு
உங்கள் அன்பில் நிதம்
நாம் வாழ்கின்றோம்

*55, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*பாஷையூர்.* (84060)

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

# அகதிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை தீவிரமாக்குகின்றது ஐரோப்பிய ஒன்றியம்!

கொழும்பு,பெப்.13

பிரிட்டனும் பிரான்ஸும் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இணங்கியுள்ள அதேவேளை, புகலிடம் தேடுவோர், பொருளாதாரக் குடியேற்றவாசிகளுக்கு எதிரான சட்டமூலத்தைக் கடுமைப்படுத்துவதெனவும் இந்த விடயம் தொடர்பாக ஒருங்கிணைந்து செயற்படுவதெனவும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 15 நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் ஸ்ரொக்கோமில் ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளனர்.

பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் இடையில் நடத்தப்படும் 'யூரோஸ்ரார்' ரயில் சேவையைப் பயன்படுத்தி அகதிகள் பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்குள் பிரவேசிக்கின்றனர். பிரான்ஸின், பாரிஸ், கேயார்டு நோர்ட் ரயில நிலையத்தில் இனிமேல் குடிவரவுப் பிரிவு அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். லண்டனில் வாட்டர்லூ ரயில் நிலையத்திலும், பிரான்ஸின் குடிவரவு அதிகாரிகள் பணியாற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் புகலிடம் தேடும் ஆசியக்குடியேற்ற வாசிகளின் வருகையைக் கட்டுப்படுத்தவே பிரான்ஸும், பிரிட்டனும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன. லண்டனிலுள்ள வாட்டர்லூ நிலையத்தில் மாதாந்தம் 400 பேர் புகலிடம் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அகதிகள் தொடர்பாகத் தளர்வுப் போக்கைப் பிரான்ஸ் கடைப்பிடிப்பதாகப் பிரிட்டன் நீண்ட காலமாகக் குற்றஞ் சாட்டி வந்தது. இந்த நடவடிக்கைகளையிட்டு மகிழ்ச்சியடைவதாகப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் தெரிவித்துள்ள அதேவேளை சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்சினையை இரு நாடுகளும் இணைந்து தீர்த்து வைக்க முடியுமெனப் பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக்குயெஸ் சிராக் கூறியுள்ளார்.

இதேவேளை -

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை 6 மாத காலத்திற்குச் சுழற்சி முறையில் பொறுப்பேற்றுள்ள சுவீடன், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளில் புகலிடம் தேடுவோர் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கான மாநாட்டைக் கூட்டியது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளான பிரிட்டன், இத்தாலி ஆகிய இரு நாடுகளுமே பெரும் எண்ணிக்கையான புகலிடம் தேடுவோரால் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும், இதனைக் கையாள்வதற்கான ஒத்துழைப்பை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க வேண்டுமெனவும் கோரியிருந்தன.

பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் குடிவரவுப் பிரச்சினையானது தேர்தலில் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தும் விவகாரமாகத் தோன்றியுள்ளது. பிரிட்டனும், இத்தாலியும் இவ்வாண்டும் ஜேர்மனியும், பிரான்ஸும் அடுத்த வருடமும் தேர்தலை எதிர்நோக்குகின்றன. பொருளாதாரக் குடியேற்றவாசிகளாக 3 லட்சத்து 90ஆயிரம் பேர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புகலிடம் தேடி விண்ணப்பித்துள்ளனர். மேலும் அகதிகள் வருகையைத் தடுப்பதற்காகத் தமது எல்லைகளில் கண்காணிப்பை அதிகரிக்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணங்கியுள்ளன.

இதேவேளை, ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருவோர் பொருளாதார அகதிகள் என்ற கருத்துக் காணப்படுகிறது. இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து வருவோரும் பொருளாதார அகதிகளாகவே கணிக்கப்படுகின்றனர்.

(ஐ)

## நெடுந்தீவில் நாடக மன்றங்கள் பதிவு செய்யப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.13

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 7 கலை, இலக்கிய நாடகமன்றங்கள் வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'தமிழ்த்தூது' தவத்திரு தனிநாயகம் அடிகள் தமிழ்மன்றம், ஐக்கிய தீப கலை கலாசாரக்கழகம், உதயசூரியன் நாடகமன்றம் மற்றும் இளைஞர் இன்னிசைக் கழகம், மலைமகள் கலைக்கழகம், ஐங்கரன் இந்து கலை கலாசாரமன்றம், நீக்கிலாஸ் கலை மன்றம் என்பனவே இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மன்றங்களின் பதிவு குறித்த சான்றிதழ்கள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட மன்றங்களின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தின் வழிகாட்டலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் மேற்கொண்டிருந்தார். (ஐ-7)

## கொழும்புத்துறை சிவன் கோயிலில் விரைவில் பூசை

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியிலுள்ள சிவன் கோயிலின் பூசை வழிபாடுகள் விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகி தெரிவித்தார்.

ஆலயத்தின் மணிக் கோபுரத்தில் இருந்த காண்டாமணி மற்றும் பொருள்கள் காணாமல் போயுள்ளன என்றும் அவர் சொன்னார். (க-17)

# நிரந்தர அகதி முகாம்களை யாழ்.செயலகம் அமைக்கும்

## தனியார் காணிகளை வாங்க ஏற்பாடு

மூளாய்,பெப்.13

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நிரந்தரமான அகதிகள் முகாம்களை அமைப்பதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பல வருடங்களாகியும், இன்னமும் தமது சொந்த வசிப்பிடங்களுக்குச் சென்று மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறான குடும்பங்களின் இருப்பிடவசதிக்காகவே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக அரச செலவில் பொருத்தமான காணித்துண்டுகள் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன. குடியிருப்புக்கு ஏற்ற வகையான தனியார் காணிகளைத் தெரிவு செய்யும் பொறுப்பு அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் காணி நியாயமான விலை கொடுத்து தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் என்றும் -

இக்காணித்துண்டங்கள் குடியிருப்பாளர்களுக்கு சொந்தமாக வழங்கப்படமாட்டாது என்றும்-

அரச காணியாகவே அவை கருதப்படும் என்றும் -

தெரியவருகிறது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் காணிகளில் நிரந்தரமான அல்லது அரை நிரந்தரமான தனித் தனியான வீடுகள் அரச செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. அத்துடன் குடி தண்ணீர் வசதி, மலசலகூட வசதி போன்ற பொதுவான அடிப்படை வசதிகளும் இக்குடியிருப்புக்களில் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல குடியிருப்புக்களைக் கொண்ட கொத்தணி அமைப்பில் வீடுகளை அமைத்து அவற்றை நிரந்தரமாக இடம்பெயர்ந்தோருக்கான முகாமாகப் பராமரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ-99)

# நெடுந்தீவு மணல்துறையில் ஆயுள்வேத வைத்தியசாலை

யாழ்ப்பாணம்,பெப்.13

நெடுந்தீவு மத்தி-மணல்துறைப் பகுதியில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ரூபா 25 லட்சம் செலவில் ஆயுள்வேத திணைக்களம் இதனை அமைத்து வருகின்றது.

இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த 5ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

கட்டடங்கள் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.மைக்கல், 'யூரோ'வில் நிறுவனத்தின் பிரதம பொறியியலாளர் எஸ்.வைத்திலிங்கம், நெடுந்தீவு பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எட்வேட் அருந்தவசீலன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் வைத்தியசாலைக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆயுள் வேத திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து இந்த வைத் தியசாலை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



வல்வை பீ.அனந்தராஜ் எழுதிய 'முகாமைத்துவ நுட்பங்கள்' நூல் அறிமுக விழாவில் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை, வதிரி திரு இருதயக்கல்லூரி அதிபர் ரீ.எவ்.மனோகரனுக்கு முதற் பிரதியை வழங்குகின்றார். அருகில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் கி. நடராஜா, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் என்.அரியரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: நெல்லியடிச் செய்தியாளர்)*

# சதம் அடிக்கும் வீரருக்கு பற்குணராஜா வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம்,பெப்.13

பாடசாலை மட்டத்தில் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான கிரிக்கட் ஆட்டங்களில் வேகமாக சதம் அடிக்கும் வீரருக்கு 'பற்குணராஜா வெற்றிக் கிண்ணத்தை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வழங்கி வருகிறது.

இந்த ஆண்டும் மேற்படி வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதற்கான விண்ணப்பங்களை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் கோரியுள்ளது.

சதம் அடித்த ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் வகித்த நடுவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டு அணிகளின் பாடசாலை அதிபர்கள் அல்லது பயிற்றுநர்கள் அதனை உறுதிப்படுத்தி விண்ணப்பங்களை 'செயலர், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஆண்டுக்கான 'பற்குணராஜா வெற்றிக் கிண்ணம்' சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மாணவனான பானுஜெயனுக்குக் கிடைத்தது. அவருக்கு கிண்ணம் வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (ஐ)

# உளநலம் பாதிக்கப்பட்டோரை அணுகி உதவும் பல்துறைசார் குழு

**யாழ்.**மாவட்டத்தில் நாளுக்கு நாள் உளநல நோயினால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தொடர்ந்து இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக பொருள், உயிர் இழப்பு, குடும்பப் பிரிவு, இடப்பெயர்வு என்று பல்வேறு காரணிகளும் உளத் தாக்கத்தின் பின்னணியாகக் காணப்படுகின்றன.

இத்தகைய உளத் தாக்கங்களுக்கு உள்ளாகியவர்களுக்கு மருந்து வழங்குவது மட்டுமல்லாது, பல் வேறுவகையான குழுச் சிகிச்சை முறைகளும் கையாளப்பட்டு, மீண்டும் பழைய வாழ்க்கை முறைக்குச்

**செய்தி மடல்**

செல்ல வழி செய்யப்படுகின்றது.

கனடிய அரசாங்கத்தினால் தெல்லிப்பழையில் அமைந்துள்ள உளநலச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியில் இருந்து பல்துறை சார் குழு (MULITI DICIPLINARY TEAM) யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட உளநலத் துறைத் தலைவர் தயா சோமசுந்தரத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

உலக நாடுகளில் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ சிகிச்சையுடன் இத்தகைய குழுமுறைச் சிகிச்சைக்கும் உள்வாங்கப்பட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் உளநலத்துறையில் முதல் தடவையாக இத்தகைய குழுமுறைச் சிகிச்சை முறை யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மந்திகை ஆகிய வைத்தியசாலைகளில் கையாளப்பட்டு வருகின்றது.

இக்குழுவில் பல்வேறு வகையான சிகிச்சையாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். அதாவது பொது உளவளத் துணையாளர், மதுபான துஷ்பிரயோக உளவளத் துணையாளர், குழந்தைகள் உளவளத் துணையாளர், சமூக வழி முறைச் சிகிச்சையாளர், தொழில் வழிச் சிகிச்சையாளர், குடும்ப உளவளத் துணையாளர்; நடவடிக்கைச் சிகிச்சையாளர்; உடல் பிடித்துவிடும் சிகிச்சையாளர், உளநல சமூக சேவையாளர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் சுமார் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் உடல் சார்ந்த நோய் அல்லாது உள மெய்ப்பாட்டு நோய் காரணமாக வருகின்றனர் என்பதை வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இக்குழுவினர், குறிப்பாக மனச்சோர்வு, உளமெய்ப்பாட்டு நோய், பதற்றம், பதகளிப்பு, பயப்பீதி, நெருக்கீட்டின் பிந்திய மனவடு போன்ற உளத்தாக்கத்துக்கு உள்ளாகியவர்களின் மேம்பாட்டுக்கு உதவி வருகின்றனர்.

அத்துடன் உள நோயாளர்கள் சமூகத்தில் இருந்தும் ஒதுக்கிவிடப்பட வேண்டியவர்கள் அல்லர். சமூகத்துக்குப் பயன்பாடு உடையவர்கள். குடும்பத்தில் அவர்களும் ஓர் அங்கத்தவர்கள் சமூகம் இத்தகையவர்களுக்கு ஆதரவாக இருந்தால் அவர்களை சாதாரணமானவர்களைப் போன்று வாழ வழிசெய்யலாம் என்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் சமூகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**வலி.வடக்குச் செய்தியாளர்**

தற்போது இக்குழுவினரின் நடவடிக்கை சமூகத்திலும் மற்றும் நோயாளர்கள் மத்தியிலும் ஒரு காத்திரமான பங்களிப்பை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உளநல சமூக சேவையாளர்கள் நோயாளர்களை வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு அவர்களின் மேம்பாட்டுக்கு வேண்டிய வழிவகைகளையும் செய்து வருகின்றனர். (ஐ-86)

# கைதடியில் கமநல நிலைய பொருள்கள் அனைத்தும் மாயம்!

கைதடியிலுள்ள கமநல சேவைகள் நிலையக் கட்டடத்தில் இருந்த 25 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் காணாமற் போய்விட்டதாக கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்று திரும்பிய கமநல சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ்.சுந்தரேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கிருமிநாசினிகள், பசளைகள் மற்றும் உள்ளீடுகள் உட்பட சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இந்த நிலையத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

கமநல சேவைகள் நிலையக் கட்டடமும் சேதமடைந்துள்ளது.

# சின்னஞ்சிறு விளம்ப[illegible]

## வீடு தேவையா?

சகல வசதிகளுடன் கூடிய சிறிய பகுதி (Separate Annex) வீடு ஆறு கால்மடத்தடியில் இரு பெண்களுக்கு/தாய், மகள்மார் தங்குவதற்கு இலவசமாக வழங்கப்படும். தொடர்பு: விள.இல. 1210, மே/பா. உதயன்.
(84079)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த.சாதாரண, உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும், இலக்கியமும், நாடகமும் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.
(84000)

## விற்பனை[illegible]

ஒரு வயது நி[illegible] சேசன் நாய் (பெண்) வி[illegible] உண்டு. தொடர்பு ச.முரு[illegible] அரசடி வீதி, கந்தர்ம[illegible] ணம்.
(83987)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையி[illegible] பெற்றுக் கொள்ளலாம். அண்[illegible] ஸ்ரேஷன் றோட், இணுவில்.
(C/15146)

## நெல் அறுவடை

அராலி, பெப்.13

அராலி வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நெல் அறுவடை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. அண்மையில் பெய்த மழை காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.(கூ[illegible])

## ஸ்ரீ.தர்ஷனனின் இசைவகுப்புகள்

N.C.O.M.S தரம் - 1, 2, 3, 4, 5, 6, O/L, A/L

ஆரம்பம்:- 15-02-2001 வியாழன் 5 மணி (இ.நே)

இடம்:- அருளகம், நூலக வீதி, சுன்னாகம் கிழக்கு

(நேரஸி அல்லது POST MASTER வீடு என்று விசாரிக்கவும்)

தொடர்புகளுக்கு:- அருளகம் அல்லது ஸ்ரீ.தர்ஷனன் செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.

பல்கலைக்கழக இசை[illegible]துறை மாணவர்களுக்கு வகுப்புகள் நட[illegible]தப்படமாட்டா.

சுன்னாகம். (8407[illegible]) -ஸ்ரீ.தர்ஷனன்.

## அவசர க[illegible]ந்துரையாடல்

2ஆம் வருட வணிகத்[illegible]ற மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான முக்கிய க[illegible]ரையாடல் இன்று (13-02-2001) செவ்வாய்க்கிழமை நல[illegible]ல் 12 மணிக்கு CH2 இல் இடம் பெறும்.

2ஆம் வருட பிரதிநிதி,
வணிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(84084)

## வாழ்[illegible]துகின்றோம்

இணு[illegible] மைந்தனும்
யா/நீர்வேலி அ[illegible]ரியார் இந்துக் கல்லூரி
பிரதி[illegible]திபருமாகிய
திரு. தாமோதரம்பிள்[illegible] அமிர்தலிங்கம் அவர்கள்
கல்வியியற்றுறையில் க[illegible]நிதிப் பட்டம் பெற்றமையிட்டு
அவர் மேன்மேலும் கல்விப் பணியில் மேன்மையுற
மனமார வாழ்த்துகின்றோம்.

இணுவில் கிழக்கு இளைஞர் கழகம். (84087)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் ஜனனம்
1927 - 03 - 21

விண்ணில் ஐக்கியம்
2001 - 01 - 14

### திருமதி சரஸ்வதி நாகலிங்கம்

திதி:- 13.02.2001

புன்னகை தவழும் பொன் முகமும்
இன் சொல் பேசும் பண்பழகும்
கண்ணியத்துடன் கடமையுணர்வும்
கொண்ட எங்கள் குல விளக்கே!
அன்பே உருவான உங்களை - இம்
மண்ணுலகில் வாழும்வரை மறப்பதுண்டோ?
மன்றிலாடும் இறைவனின் மலரடி சேர்ந்து
இன்ப வாழ்வில் நிலைத்திடப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய நிகழ்வின் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
ஆ.சிவராசா,
ஸ்ரீனாய் மேற்கு,
சுளிபுரம். (84077)

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பாஷையூர் மீன் சந்தை மீண்டும் இயங்குகிறது

அரியாலை,பெப்.13

பாஷையூர் மீன் சந்தை கடந்த சனிக்கிழமை முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

சந்தையில் பாவனையாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் மீன்களின் விலை அதிகரித்தே விற்கப்படுகிறது.

(க-17)

## எல்லே போட்டி

வலி.வடக்கு, பெப்.13

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் மேற்கு மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

(ஐ-86)

## ஆய்வு முறையியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆய்வு முறையியல் கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணக்கு யாழ் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் விவசாய விலங்கியல் துறைப் பேராசிரியர் அ.நவரட்ணராஜா 'ஆய்வு முடிவுகளுக்குப் பொருள் கோடல்'எனும் விடயம் பற்றி கருத்துரை வழங்குவார். இதனைத் தொடர்ந்து கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ச.யோகராஜா 'புள்ளி விவரப் பகுப்பாய்வு' சம்பந்தமாக உரைவழங்குவார். புள்ளி விவரப் பகுப்பாய்வைத் தொடர்ந்து விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் கருத்தரங்குத் தொடரின் முத்தாய்ப்பினை ஆற்றுவார்.

(ஐ)

## விவாதத்துக்கு கோரிக்கை

ரூபாவின் பெறுமதியை மிதக்க விடப்பட்டது தொடர்பாகஆராய நாடாளுமன்ற விவாதமொன்று வேண்டும் என்று ஐ.தே.க. கோரியுள்ளது. சபாநாயகர் அநுராபண்டாரநாயக்கவின் தலைமையில் கூடிய கட்சி தலைவர்களின் கூட்டத்தின் போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த யோசனைக்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்தாலும் விவாதத்தை நடத்துவதற்கு சபாநாயக்கர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-20)

## மணி விழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



பேராசிரியர் அ.சண்முகதாஸ்

(உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

மணி விழா நாயகன் - மானுட நேயன்
"குன்றின் மேல் விளக்கென மிளிரும்"
அவர்களை உலகறிய
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக
பொது நிர்வாகப் பட்டப்பின் டிப்ளோமா மாணவர்கள்.
(P.G.D.Pub.Ad.Students) (C/15264)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



முன்னாள் தபாலதிபரும், தற்போதைய தீவுப் பகுதி விவாகப் பதிவாளரும், ஊர்காவற்றுறை பிறப்பு இறப்புப் பதிவாளரும், வேலணை மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவரும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத் தலைவரும், சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை உபதலைவரும், வேலணை மேற்கு பெரியபுலம், மகா கணபதிப் பிள்ளையார் கோயில் நிர்வாக சபை உறுப்பினருமாகிய

**திருவாளர் க.இளங்கோவன்** அவர்கள்

அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி
திரு.R.T.விக்னராஜா முன்னிலையில்
அகில இலங்கை சமாதான நீதிவானாக
சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல முருகப் பெருமானது அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வேணி களஞ்சிய உரிமையாளரும்,
ஊழியர்களும்

165,K.K.S.ROAD,JAFFNA. (84081)

## பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
சிவானந்தன் - சுனித்ரா தம்பதிகளின்
செல்வப் புதல்வர்களான



செல்வன் சி.சிவானுஜன்
தனது இரண்டாவது
பிறந்த தினத்தை

செல்வன் சி.சிவருஜன்
தனது முதலாவது
பிறந்த தினத்தை

விக்கிரம வருடம் இன்று 13.02.2001ஆம், விக்கிரம வருடம் 24.02.2001 அன்றும் தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், ஹொலண்டில் வசிக்கும் மாமா, பூட்டி, பூட்டன் ஆகியோர் சிவானுஜன், சிவருஜன் ஆகிய இருவரையும் வீரமாகாளி அம்பாள், நல்லூர்க் கந்தன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*சிவலிங்கம் மோட்டோர்ஸ்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.-021-3212*

(84074)

தகவல்:
அப்பா- சிவானந்தன்

# குடாநாட்டு விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

## பணம் செலுத்தாத பகுதிகளுக்கு இல்லை

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ், மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் 'சிடா' திட்டத்தின் கீழ் விவசாயிகளுககு வழங்கப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களுக்குரிய பணத்தில் 17 இலட்சத்து 70 ஆயிரத்து 935 ரூபா இதுவரை விவசாய சம்மேளனங்களால் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவசாயிகளுக்கு 2000 நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்குதல் என்ற அடிப்படையில் இதுவரையும் ஆயிரத்து 206 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புத்தூர், உடுவில், கீரிமலை, சாவகச்சேரி, கைதடி, பளை, புலோலி, தொல்புரம் மற்றும் வேலணை ஆகிய விவசாய சம்மேளனங்களின் விவசாயிகளுக்கே இவை வழங்கப்பட்டன.

இவற்றில் புத்தூர், உடுவில் மற்றும் கீரிமலை ஆகிய விவசாய சம்மேளனங்களே மேற்படி பணத்தில் பெரும் பகுதியை வழங்காதிருக்கின்றன என்று கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

இதனால் தற்பொழுது எடுத்துவரப்பட்டுள்ள 250 நீரிறைக்கும் இயந்திரங்களில் மேற்படி விவசாய சம்மேளனங்களுக்கு வழங்கப்படாது என்றும் விரைவில் குறிப்பிட்ட பணத்தை வழங்கும் பட்சத்தில் திரும்ப எடுத்துவரப்படவுள்ள 500 நீரிறைக்கும் இயந்திரங்களில் குறிப்பிட்ட சம்மேளனங்களுக்கும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாய சம்மேளனங்களும் விவசாயிகளும் பணத்தைச் செலுத்தி சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்ற இத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள உதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

(க-10-ரி)

## மின்சாரம்வருமென காத்திருக்கும் மக்கள்!

யாழ்ப்பாணம், பெப். 13

மின்சம்பங்கள் நட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் நவாலி, சடுவில் வீதிப்பகுதிக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

மின்சம்பங்கள் நடப்பட்டதும் அப்பகுதி மக்கள் அவசர அவசரமாக வீடுகளுக்கு மின் இணைப்புக்கான வேலைகளைச் செய்திருந்தனர் ஆனால் இன்னும் மின்சாரம் கிடைத்தபாடில்லை.

மின்சாரசபையுடன் தொடர்பு கொண்ட போதெல்லாம் ''விரைவில் இணைப்பு வழங்குவோம்'' என்ற பதிலே கிடைத்தது. ஆனால் காரியம் இன்னும் நடக்கவில்லை என்று அங்கலாய்க்கின்றனர் அப்பகுதி மக்கள். (க—15)

## அன்னதானம்

வலி. வடக்கு, பெப். 13

தலையாளி ஸ்ரீஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை ஒட்டி இன்று செவ்வாய்கிழமை நண்பகல் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினரால் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

(ஐ—86)

# கைதடியில் மீள் குடியமர்வு நாளை முதல் ஆரம்பம்

## விருப்பம்தெரிவித்தவர்களுக்குஅழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

கைதடிப் பகுதியில் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்திருக்கும் குடும்பங்களை நாளை 14 ஆம் திகதியும் மறுதினம் 15 ஆம் திகதியும் மீளக் குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதாக 52 ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி கோப்பாயில் உள்ள 521 ஆவது பிரிக்கேட் சிவில் நிர்வாக காரியாலயத்திற்குச் சென்று மீளக்குடியமர விருப்பம் தெரிவித்த குடும்பங்களையே மீளக் குடியமர்த்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கைதடி வடக்கு (ஜே- 288) மற்றும் கைதடி தென்கிழக்கு (ஜே-292), கைதடி மேற்கு (ஜே-293) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மீளக்குடியமர விருப்பம் தெரிவித்த குடும்பங்களையும் —

15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கைதடி கிழக்கு (ஜே-289) கைதடி மத்தி. (ஜே 290) கைதடி தெற்கு (ஜே-291) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மீளக் குடியமர விருப்பம் தெரிவித்த குடும்பங்களையும் —

தங்களது உடைமைகளுடன் மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகளுடன் உரிய திகதிகளில் கோப்பாய்ச் சந்தியில் அமைந்துள்ள 521 ஆவது பிரிகேட் சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு வருமாறு 52 ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (க-6)

## தடுப்பு முகாமுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 13

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்றுகையளிப்பார். (ஐ-10)

## இந்துமகளிர் மாணவிகளுக்கு

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் ஜி. சி. ஈ சாதாரண பரீட்சைக்குத் தோற்றியவர்களை உயர்தர வகுப்புகளுக்கு பிரித்து விடும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

2003 ஆம் ஆண்டில் ஜி சி ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மேற்படி மாணவிகளை நாளை மறுதினம் வியாழக்கிழமை தவறாது கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் திருமதி எஸ். ஜெயராசா கேட்டுள்ளார்.

(அ)

# 'கிரிந்த' கப்பலில் 8 வாகனங்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 13

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த கிரிந்த கப்பலில் 8 வாகனங்கள் உட்பட 2,695 மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

தனியாருக்குச் சொந்தமான 5 கார்களும் ஜி. ரி. சற் நிறுவனத்திற்கு 2 டிராக்டர்களும் கல்வித் திணைக்களத்திற்கு ஒரு வான் ஆகியவையே எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை தவிர குடாநாட்டு வர்த்தகர்களுக்கான பொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றில் சீனி, மதுபானம், அமோனியம்சல்பேற், கட்டுமரத்துக்கான மரங்கள், சிமெந்து, சைக்கிள்கள், கண்ணாடிகள் உட்பட பல அத்தியாவசிய பொருள்களும் வந்துள்ளன.

இவற்றை இறக்கும் பணி துரிதகதியில் நடைபெற்று வருவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க—6)

## சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் புதிய இடத்தில்

சண்டிலிப்பாய், பெப். 13

யாழ் அரசினர் போதனா வைத்தியசாலைக்குச் சமீபமாகவுள்ள கட்டடத்தில் இயங்கி வந்த யாழ் சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை யாழ்: கச்சேரி நல்லூர் வீதியில் — முன்னர் யாழ் கல்வி வலய அலுவலகம் இயங்கி வந்த கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னைய அலுவலகம் யாழ் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கும் மற்றும் யாழ். பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர்களின் போக்குவரத்துக்கும் மிகவும் வசதியாக இருந்தது.

புதிய இடம் போக்குவரத்திற்கு சிரமமான இடமாக உள்ளதாகச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். மலேரியா தடுப்பு இயக்க அலுவலகமும் இப் புதிய கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது.

(க-135)

## பளை மாணவருக்கு பால், இலைக்கஞ்சி

தென்மராட்சி, பெப் 13

கரவெட்டி யார்க்கருவில் இயங்கும் பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கரவெட்டி பங்குத் தந்தையின் அனுசரணையுடன் சியுடெக் நிறுவனத்தினர் பால்மா வழங்கி வருகின்றனர்.

தினமும் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான மாணவர்களுக்கு பால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை இப்பாடசாலையில் தரம் 1, 2 ஆகிய வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இப் பகுதி பெற்றோர்களின் உதவியுடன் வெள்ளிக்கிழமைகளில் இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

# 'ரகிங்' என்ற வார்த்தைக்கே கல்வியியல் கல்லூரியில் இடமில்லை

## மாணவர் வரவேற்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், பெப். 13

பகிடிவதை (ராகிங்) என்ற வார்த்தைக்கே இடமின்றி நல்லொழுக்கம் உடைய மாணவர்களுடன் புதிய மாணவர்கள் பயிற்சிக்காக அனுமதிக்கப்படும் நிகழ்வு மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய கல்வியாண்டில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க! யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அமைந்துள்ள யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவ முதல்வி செல்வி எஸ். காவேரி தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

வைத்திய கலாநிதி தியாகராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலே ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்விக் கல்லூரியானது இரண்டாம் கட்ட மாணவர்களை உள்வாங்கி இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. பல்வேறு இழப்புகளுக்கு மத்தியில் இளம் சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் கல்வியியற் கல்லூரியின் பொறுப்பை ஏற்ற பீடாதிபதி தி. கமலநாதன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் தந்தை எனப் போற்றப்பட வேண்டியவர் — என்றார்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராயன் உரையாற்றுகையில்:-

யாழ். கல்வியியற் கல்லூரியின் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்குரிய நிதி வெகு விரைவில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால்வழங்கப்பட உள்ளது. முழுமையான வசதிகள் இன்றி இந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இயங்கி வருகின்ற இந்தக் கல்வியியற் கல்லூரி இரண்டாம் கட்டமாக மாணவர்களை உள்வாங்குகின்ற இந்த நாள் மிகவும் மகிழ்ச்சிக்குரியது. தொடர்ந்து இக் கல்லூரி இந்தமண்ணுக்குச்சேவையாற்ற வேண்டும். என்றார்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் மு பரஞ்சோதி உரையாற்றுகையில் —

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் செய்த தியாகத்தின் பலனாகவே யாழ்ப்பாணத்தில் இந்த தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. கலாசாலை விரிவுரையாளர்கள் சகலரும் ஏகமனதாக தாங்கள் கஷ்ரப்பட்டாலும் பரவாயில்லை கல்விக் கல்லூரி இயங்குவதற்கு ஒரு பகுதியைக் கொடுக்கும்படி கூறியதன் காரணமாக நான் கல்வி அமைச்சுக்கு சம்மதம் தெரிவித்தேன். அவ்விரிவுரையாளர்களது தியாகம் வீணாகாமல் எமது கலாசாலையை முழுமையாகப் பயன்படுத்தி கல்வியில் உயர் நிலைக்கு ஆசிரிய மாணவர்கள் வர வேண்டும் — என்றார்.

### பீடாதிபதி

இறுதியாக கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி கமலநாதன் பேசுகையில்:— உலக வங்கியினால் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும், கட்டடம் கட்டுவதற்கான காணி ஒப்படைக்கப்பட்டும் கூட தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் இன்மையால் புதிய கட்டடத்தை கட்ட முடியாமல் உள்ளது. விடுதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அருகில் சில வீடுகளும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய வாடகைப்பணத்தை பிரதேச சபைத் தலைவர்கள் வழங்கச் சம்மதித்துள்ளனர். இங்கு ஒரு நாளாவது 'ராகிங்' பற்றிக் கதைத்ததில்லை. அது பற்றி மாணவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் — என்றார்.

ஆசிரிய மாணவர்கள் சார்பில் உரையாற்றிய மாணவப் பிரதிநிதி பேசுகையில் 'ராகிங்' என்ற கொடிய நோயை முற்றாக வெறுக்கிறோம். இலட்சிய நோக்குடன் கற்கும் ஆசிரிய மாணவர்களாகிய நாங்கள் ஒரு போதும் கீழ்த்தரமான செயலில் ஈடுபடமாட்டோம்— என்றார்.

இந்நிகழ்வில் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்களும் உரை நிகழ்த்தினர்.

(ஐ-72)


# கண்ணீர்க் காணிக்கை

எமது சக மாணவி

அருட்சகோதரி புவனேஸ்வரி துரைச்சாமி

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி துரைச்சாமி

அவர்கள் 09-02-2001 அன்று வவுனியாவில் காலமானார். இவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவர்கள்.

(84082)

## வாழ்த்துகின்றோம்

25 - 10 - 2000 இல் ஆசிரியப் பணியில்
மூன்று தசாப்தங்களை நிறைவு செய்து
இ.க.நி சேவை தரம் III இனுள் உள்வாங்கப்பட்டிருக்கும்
எமது ஆசிரியர்

**திருமதி பத்மாவதி இரத்தினவேல்**

B.A.(Hons), Dip. in Ed, Dip. in Hindu Civil, S L.E A.S. – III
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை)

அவர்களை வாழ்த்தி, அவர்பணி மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

• ஆசிரியரின் மாணவர்கள்

(84096)

## கண்ணீர் அஞ்சலி

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு, நாவலடிக் கிராமத்தில் அமைந்துள்ள சி.க.வ.கூ. சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், திடல் பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் தலைவராகவும், நாவலர் ச.ச நிலையம், உ. ப. நோ. கூ. ச. கிளை 18 இன் செயலாளராகவும், நவஜீவன்ஸ் வி. கழக காப்பாளராகவும்

எமக்குச் சேவை புரியும்

**திரு. கொ. குணசிங்கம்** அவர்களின்
(ஆசிரிய ஆலோசகர், வடமராட்சிக் கல்வி வலயம்)

அன்பு மாமனார்

**க. கிருஸ்ணர்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கி. இராசன், ச. செல்வநாதன்,
(84100) சீ. குணசிங்கம், த. ஈஸ்வரலிங்கம்.

## 31ஆம்நாள் நினைவு இரங்கல்

மட்டக்களப்பு, ஏறாவூர் ஆயுள்வேத மத்திய மருந்தக மருத்துவ பொறுப்பு உத்தியோகத்தரான

DR. **திருமதி ஜெயலக்ஷ்மி பாஸ்கரன்**
அவர்களின் அன்புத்தாயாரும்

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் ஆயுள்வேதமத்திய மருந்தக பொறுப்பு உத்தியோகத்தரான

DR. **இ. பாஸ்கரன்**
அவர்களின் பாசமிகு மாமியாருமாகிய

பொன்னாலை, மூளாயைச் சேர்ந்த

**திருமதி சரஸ்வதி நாகலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

B S. M. S. பட்டதாரிகள்
(84107) சங்கம், கைதடி.

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சிக் கிளையைச் சேர்ந்த
துவாரகா பேக்கரி உரிமையாளர்

**திரு. க. சிவகுருநாதன்**
அவர்களின் தந்தையார்

**மயில்வாகனம் கணபதிப்பிள்ளை**
(பேக்கரி தம்பு)

அவர்களின் மரணச்செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.
(சி/15273)

## கண்ணீர் அஞ்சலி

யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில்
ஆசிரியராகக் கடமையாற்றும்

**திருமதி நிரஞ்சினி கணேசலிங்கம்**
அவர்களின் பாசமிகு கணவர்

**கணேசலிங்கம்**

அவர்கள் காலமாகிவிட்ட செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/கரணவாய் அதிபர், ஆசிரியர்கள்,
பொன்னம்பல வித்தியாலயம், மாணவர்கள்.
கரவெட்டி. (சி/15280)

## மேலும் எண்மருக்கு கல்வியியல்கல்லூரி அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரிக்கு மேலும் எட்டுப் பேருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

"நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்" என்ற புதிய கற்கை நெறிக்கே இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ். பத்மினி — சித்தன்கேணி, கே. கோணானந்ததேவி — இணுவில், சியாமளா — சங்குவேலி தெற்கு, என். மங்களேஸ்வரி — வாழைச்சேனை, வி. ரசித்தா — வவுனியா, லவ. ஜெயந்தி — மிருசுவில், ரீ. அநுஷியா — சங்குவேலி வடக்கு, ரி. பிரபாஜினி — இருபாலை ஆகியோரே அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களாவர்.

இவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வியியல் கல்லூரியில் சமுகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட—பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3-30 மணிமுதல் இடம்பெறும் அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

★ பாடும்மீன் வி. க. எதிர் ஜெட்லைனர்ஸ் வி. க.

★ குருநகர் வி. க. எதிர் சென்றோக் வி. க.

(உ-3)

## கராத்தே கறுப்புப்பட்டி வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 13

அக்கடமி ஒவ் ஓரியன்டல் மாஷல் ஆட் கராத்தே கழகத்தின் ஏற்பாட்டில் கறுப்புப் பட்டி வழங்கும் வைபவம் நல்லூர் இந்துமகளிர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பத்துப்பேர் முதலாம் கறுப்புப் பட்டியையும், ஐந்து பேர் 2 ஆம் கறுப்புப்பட்டியையும் பெற்றனர்.

இந்தக்கழகத்தின் தலைமை ஆசிரியரும் நிர்வாக இயக்குநருமான பெனடிக் கபிரியேல் றேமன் இந்தப் பட்டிகளை வழங்கினார்.

இந்தக் கழகத்தில் கராத்தே பயின்ற மாணவர்கள் கொழும்பில் மட்டுமல்லாது ஆஸ்திரேலியா, நோர்வே, இந்தியா போன்ற நாடுகளில் கராத்தே வகுப்புக்களை நடத்தி வருவதுடன் அங்கு நடக்கும் போட்டிகளில் பங்குபற்றி முதன்மையாளர்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

(ஜ-3)


## விற்பனைக்கு

★ பனசோனிக் தொலை பேசி- 1 யுனிற்
★ தொலை நகல் FAX பனசோனிக் யப்பான்
★ C D செட் – 01 Deck

**சிவா**
தொலைத் தொடர்பகம்
448, K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P,2913 (84105)


ROTARACT CLUB

## யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகம்

மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு
**தேடலுக்கான பரீட்சை - 04**

எமது கழகத்தால் தவணைதோறும் நடத்தப்பட்டுவரும் மேற்படி பரீட்சையில் இந்தத் தவணைக்கான பரீட்சை 05-02-2001 முதல் ஆரம்பமாகியுள்ளது.

வினாத்தாள்கள் பாடசாலைகளினூடு அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாத அல்லது மேலதிகமாக வினாத்தாள்கள் தேவைப்படும் பாடசாலைகள் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

★ குறிப்பு: வடமராட்சிப் பகுதி மாணவர்கள் இம்முறை வினாத்தாள்களைப் பின்வரும் கல்வி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மெதடிஸ்த கல்வி நிலையம் (Y.M C.A.),
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை,
சதாபொன்ஸ் கல்வி நிலையம்,
அல்வாய்.

● விடைத்தாள்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 22-02-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(சி/15276)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயகம் றோசம்மா

மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்காலிகமாக 115, 3 ஆம் குறுக்குத் தெருவை வதிவிடமாகவும் கொண்ட றோசம்மா நேற்று (12 - 2 - 2001) காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரி, சிவஞானேஸ்வரிஅம்மாள், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிறீசெல்லஸ் கந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 115, 3 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (13 - 02 - 2001) செவ்வாய் மாலை 3 மணிக்கு வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் க. கனகேஸ்வரன்
115, 3 ஆம் குறுக்குத்தெரு, (மருமகன்)
யாழ்ப்பாணம். (84104)

### வைத்திலிங்கம் துரையப்பா

வீரபத்திர கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் துரையப்பா 12-02-2001 திங்கள் காலமானார்.

இவர் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் கதிர்காமநாதன், சிதம்பரநாதன் (கண்ணன் பந்தல் சேவை, மல்லாகம்), புஸ்பலீலா (ஆசிரியை, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), புஸ்பமலர் ஆகியோரின் தந்தையாரும் தனரூபியின் அன்பு மாமனாரும் குகவர்மன், துளசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வீரபத்திரகோயிலடி, மனைவி, பிள்ளைகள்.
மல்லாகம். (சி/15279)

### த. செல்லத்துரை

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் த. செல்லத்துரை கடந்த வியாழக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும் சாந்தி(பாடசாலை பற்சிகிச்சையாளர், மட்டக்களப்பு) ஸ்ரீரஞ்சினி (கனடா), சந்திரகுமார் (கனடா), நிமலினி (மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமார் (பத்திரிகையாளர்), தயானந்தன் (கனடா), ஞானரெட்ணம் (றெட்பானா) ஆகியோரின் அருமை மாமனாரும், பைரவி (கனடா), பிரவின் (கனடா), ஆரதி (கனடா), சர்மிலன் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு பாட்டனாரும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பசுபதியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று முன்தினம் நீர்கொழும்புப் பொதுமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:-
சாந்தி உதயகுமார்
515/14, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி 065 - 22872, 078 - 669419
(சி/15281)

# 75 ஆவது பிறந்த தின வாழ்த்து



அராலி செட்டியார்மடத்தைச் சேர்ந்த

**ச.சந்திரசேகரம்**

(Retirtd T.O, High ways)

இன்று தனது 75 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

அவரை மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சம்பந்திமார்கள் அனைவரும் நீடுழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

(C/15274)


# இலவச கணனிப் பயிற்சித் திட்டம்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களைக் கணனிமயப் படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் 2001 ஆம் ஆண்டில் இலவச பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.

பிரிவு IV ஆரம்பம்: 15.02.2001 மாலை 4.00 மணி

*பதிவுகளை மேற்கொண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.*

(C/15275)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 01 - 1932



மறைவு 25 - 02 - 2000

**அமரர் தம்பிப்பிள்ளை தியாகராசா**

(முத்தமிழ் வீதி, கொட்டடி)

*எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஆறாது எம் துயரம்.*

அன்புடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*முஸ்லிம் வீதி, யாழ்ப்பாணம்.* (84106)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1916 - 01 - 21



மறைவு 2001 - 01 - 14

**சின்னப்பொடியன் செல்லன்**

தோற்றம் 1927 - 03 - 21



மறைவு 2001 - 01 - 09

**திருமதி இலட்சுமி செல்லன்**

திதி: 13.02.2001.

இன்று (13. 02. 2001.) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*திரு. செ.பூ பாலசிங்கம்,*
*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(84108)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## புலிகளை....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு சீர்திருத்த யோசனைகள் பற்றிய புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை உலகம் நன்கறியும். அதனை மீண்டும் இங்கு விவரித்துக் கூறுவது அவசியமில்லை. இந்த அரசமைப்புத் திட்டத்தில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. இது எமது மக்களின் அரசியல் அபிலாஷைகள் எதையுமே தொடவில்லை. புலிகள் இயக்கத்தையும் ஏனைய பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகளையும் பொறுத்த வரை இந்த அரசமைப்புத் திட்டமானது செயலிழந்து, செத்துப்போன ஓர் ஆவணம். இந்த செத்துப்போன ஆவணத்துக்கு உயிர் கொடுப்பதால் எந்தவிதப் பயனும் ஏற்படாது.

இன நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவே பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. இந்த இன நெருக்கடியானது தமிழரின் பிரச்சினை சம்பந்தப்பட்டது. தமிழரின் கோரிக்கைகள், அபிலாஷைகள் சம்பந்தப்பட்டது. ஒரு தேசிய இனத்தின் கூட்டுரிமை சம்பந்தப்பட்டது. சமாதானப் பேச்சுக்களின்போது தமிழரின் பிரச்சினையைக் கருத்தில் எடுக்கும்போது அப்பிரச்சினையின் ஆழமான அடிப்படைகளை, உள்ளீடுகளை, மையங்களை நாம் அலசிப் பார்ப்பது அவசியம். அப்படிப் பார்க்கும் போது வரலாற்று ரீதியாக அமைந்த தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் தேசியத் தகைமை, அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவையே இனப்பிரச்சினைகளின் அடிப்படைகளாக, மையக் கூறுகளாகக் காணமுடியும். தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வையும் நிரந்தர சமாதானத்தையும் விரும்புபவர்கள் அனைவருமே இனப்பிரச்சினையின் அடிப்படைகளை எதிர்கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் அவை பற்றி விவாதிக்கவும் தயாராக இருக்கவேண்டும். அப்படி விவாதிக்கும் பொழுது எமது மக்களின் அடிப்படையான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் புதிய அரசியல் வடிவமைப்புக்கள் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

### சுயநிர்ணய உரிமை

எமது மக்களின் மையப் பிரச்சினைகளைத் தழுவி நிற்கும் கோட்பாடுகளை சிங்கள அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவில்லை. அவற்றின் அர்த்தங்களைத் திரித்து, சிதைத்து, பிறழ்வுபடுத்தி, அசிங்கப்படுத்திவிட்டதால் அவை ஆபத்தான கோட்பாடுகளாக, தேசத் துரோகத்தைக் குறிக்கும் கருத்துருவங்களாக மாற்றப்பட்டுள்ளன. சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது இலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் மட்டுமின்றி, வேறு இடத்தில், எமது நண்பர்கள் மத்தியிலும் எத்தகைய சந்தேகத்துடனும், அச்சத்துடனும் நோக்கப்படுகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம். சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றி நான் இங்கு ஒரு நீண்ட விளக்கத்தை அளிக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் சுயநிர்ணய உரிமை என்பது சட்ட ரீதியான, அரசியல் ரீதியான ஓர் உரிமை. ஒரு மக்கள் சமூகம் தனது அரசியல் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் இவ்வுரிமை அம்மக்களுக்கு வழங்குகின்றது. தமிழ் மக்களும் இந்த உரிமைக்கு உரித்தானவர்கள். ஏனென்றால் அவர்களும் ஒரு மக்கள் சமூ

(12ஆம் பக்கம் பார்க்க)

# துயர் பகிர்கின்றோம்

எமது துறையில் போதனாசிரியராகக் கடமையாற்றும்
செல்வி அ.மதிவதனி அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் தி.அமரசிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தாருடன் நாமும் துயர் பகிர்வதோடு இவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கணித புள்ளிவிவரவியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(84102)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

சாமியன் அரசடி, கரவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை 11-02-2001 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தெய்வானையின் அன்புக்கணவரும், சிவராசா, சத்தியமூர்த்தி, ஸ்ரீஸ்கந்தராசா(கனடா), யோகராணி(கனடா) ஆகியோரின் தந்தையும், கணேஸ்வரன்(கனடா), கிருஷ்ணதேவி, புனிதவதி, ரட்ணமாலா(கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12-02-2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.*
(84086)

தகவல்:
கி.சிவராசா (மகன்)
(ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்விவலயம்)

## நன்னித்தம்பி கனகராசா
(இருபாலை)

கோண்டாவில் றோட், இருபாலையை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய நன்னித்தம்பி கனகராசா அவர்கள் 11.02.2001 இல் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் க.இராசமணியின் (மணியக்கா) அன்புக்கணவராவார். அன்னாரின் பிள்ளைகள் ஜேர்மனி, சுவிஸில் வாழ்கிறார்கள்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம்

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
(84098)

## திருமதி மாணிக்கம் சின்னம்மா

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் சின்னம்மா நேற்று (12.02.2001) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் மயில்வாகனம் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் வே.தங்கம்மாவின் சகோதரியும், நடராஜா(ஓய்வுபெற்ற வரிப்பரிசோதகர்), அன்னபூரணம் (கனடா), புவனேஸ்வரி, ஏரம்பமூர்த்தி, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), கமலாதேவி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் த.பசுபதி, சி.ஞானேந்திரம், செ.விக்னேஸ்வரமூர்த்தி (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்), சி.மகேந்திரம்(பிரதேச செயலகம், கோப்பாய்), சிவக்கொழுந்து(ஓய்வுபெற்ற ஆசிரியை), அல்லிராணி, இராஜேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோமதி (ஆசிரியை), குகதாசன்(கணக்காளர், பிரதேச செயலகம் - கோப்பாய்), நிததியானந்தன்(ஜேர்மனி), ஜெகதீஸ்வரன்(கனடா), சாயீஸ்வரி(கொழும்பு), சாந்தீஸ்வரி(கனடா), தஜீகரன்(கனடா), கலைவாணி(கனடா), கார்த்திகா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), கௌசிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பிரதீபன்(யாழ்.மத்திய கல்லூரி), ஜெகதா (ஜேர்மனி), ஸ்ரீகரன் (ஜேர்மனி), விஜிதா(சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்), வனிதா (யாழ்.தொழிநுட்பக் கல்லூரி), ஜெயகாந்தன் (ஜேர்மனி), மேனகா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), புவீந்திரன்(ஜோன் பொஸ்கோ ம.வி.) ஆகியோரின் பேர்த்தியும் சரண்யா, சாருஜன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(13.02.2001) பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன் சந்தி,*
*நீர்வேலி மத்தி.*
(84101)

தகவல்:
ஏரம்பமூர்த்தி (மகன்)

விஸ்வப்பிரம்ம ஸ்ரீ

## மயில்வாகனம் நடராஜா (ஆசாரியார்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நடராசா நேற்று (12.02.2001) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆச்சிமுத்து(அச்சுவேலி) தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக்கணவரும் விஜிதரன், விஜிதா, விஜயதர்சினி, விஜயரோகிணி (மாணவி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சாந்தகுமாரின்(பிரான்ஸ்) அன்பு மாமனாரும் அன்னலட்சுமி, அமரர்களான சரஸ்வதி (சின்னக்கிளி), சிவராசசிங்கம் (பாதிரி) மற்றும் சண்முகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முத்தையா, கணபதிப்பிள்ளை, இரத்தினமணி, செல்வராசா, நாகேஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தலிங்கம் - மனோன்மணி (சுன்னாகம்), தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(13.02.2001) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உடுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சண்முகராஜா
(சின்னையா - சகோதரன்)

*அம்மன் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*
(84103)

# புலிகளைப் பிரிட்டன் அரசு....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் கட்டமைப்பைக் கொண்டவர்கள். இனத்துவ பிரக்ஞையாலும், போராட்ட எழுச்சியாலும் ஒன்றுபட்ட மக்கள் சமூகமாக எமது மக்களும் அணி திரண்டு நிற்கிறார்கள்.

காலனித்துவ காலக் கருததுலகில் சஞ்சரிக்கும் கதிர்காமர், சுயநிர்ணய உரிமையை வெறுமனே பிரிந்து செல்லும் உரிமையாகக் காண்கிறார். சுயநிர்ணய உரிமை பற்றி சமகாலத தில் நிகழும் விவாதங்கள், கருத்தோட்டங்கள் பற்றி அவர் அறியவில்லைப் போலும். சுயநிர்ணய உரிமை என்பது வரலாற்று ரீதியாக வளர்ந்துவரும் ஒரு கருத்துருவம். செழுமையான அர்த்தத்தையும் படைப்பாற்றலையும் கொண்ட கோட்பாடு. தேசிய இனப் போராட்டங்களை அரவணைத்து, நாகரிகமான அரசமைப்பு வடிவங்களில் உள்வாங்கும் ஆற்றலும் சிருஷ்டிகரத் தன்மையும் அதற்குண்டு. பிரிந்து சென்று தனி அரசை அமைக்கும் உரிமையும் இக் கோட்பாட்டில் இருக்கத்தான் செய்கிறது. ஒரு மக்கள் சமூகத்திற்கு சுயாட்சி உரிமை மறுக்கப்பட்டு, அம் மக்கள் மீது இன அழிப்புப் பரிமாணத்தில் ஒடுக்குமுறையும் பாரிய மனித உரிமை மீறல்களும் நடத்தப்பட்டால் இறுதிப் பரிகாரமாக பிரிந்து சென்று தனி அரசை அமைப்பதற்கு அம் மக்களுக்கு உரிமை உண்டு. தமிழ்மக்களும் தமது வரலாற்றுத் தாயகத்தில் சுயாட்சியை நிறுவ சிங்கள அரசு மறுத்துவருகிறது. அத்தோடு அவர்களை தாங்கொணா ஒடுக்குமுறையில் விளிம்புக்கு தள்ளிக்கொண்டிருக்கிறது. இதனால் இறுதிப் பரிகாரமாக அரசியற் சுதந்திரம் வேண்டி தனி அரசை அமைக்கும் நிர்ப்பந்தத்திற்கு அவர்களை ஆளாக்கி வருகிறது.

## பிரிட்டனில் வருவது அடக்குமுறைச் சட்டம்

*கேள்வி:* அடுத்தவாரம் அமுலுக்கு வரும் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என ஸ்ரீலங்கா அரசு பிரிட்டிஷ் அரசாங்கம் மீது அழுத்தும் பிரயோகித்து வருகிறது. பிரித்தானியாவில் புலிகள் இயக்கம் நிச்சயமாகத் தடைசெய்யப்படுமென ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் நம்பிக்கையுடன் இருக்கிறார். இதுபற்றி உங்கள் கருத்து என்ன? பிரித்தானியா உங்களது விடுதலை அமைப்பைத் தடைசெய்யும் என நினைக்கிறீர்களா?

*பதில்:* முதலாவதாக, பிரிட்டிஷ் பயங்கரவாதச் சட்டம் பற்றி ஒருசில வார்த்தைகள். இது ஓர் அடக்குமுறைச் சட்டம் இந்தச் சட்டத்தில் 'பயங்கரவாதம்' என்பதற்கு மிகவும் அகன்ற, தெளிவற்ற வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வரைவிலக்கணத்தின் கீழ் நியாயமான, தர்மமான அரசியல் இலட்சியங்களுக்காக வன்முறை வடிவங்களில் மேற்கொள்ளப்படும் சகலவிதமான போராட்டங்களுக்கும் பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இன அழிப்பை நோக்கமாகக் கொண்ட அரச ஒடுக்குமுறைக்கு எதிராக தற்பாதுகாப்புக்காக நடத்தப்படும் ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்படுகிறது. உலகில் நிகழும் வன்முறைப் புரட்சிகள், தேச விடுதலைப் போராட்டங்கள், ஆயதம் தரித்த எதிர்ப்பு இயக்கங்கள், கிளர்ச்சிகள், வன்முறை வடிவிலான ஆர்ப்பாட்டங்கள் - எல்லாமே பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தப்படுகிறது. சகிப்புத் தன்மையிலும், ஜனநாயக மரபிலும் முற்போக்கு அரசியலிலும் சிறப்பான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட பிரித்தானியா இத்தகைய கொடுமையான பயங்கரவாதச் சட்டத்தை உருவாக்கியிருப்பது துரதிஷ்டவசமானது என்றே சொல்ல வேண்டும். உலகம் தழுவிய ஆழமான வரலாற்று அனுபவத்தில், காலனித்துவத்துக்கும் இன வாதத்துக்கும் எதிராக நிகழ்ந்த ஆயுதப் போராட்டங்களின் தன்மைகள் பற்றி பிரித்தானியா நன்கறியும். உலகடங்கிலும் ஒடுக்கப்பட்ட இனங்களும் நசுக்கப்பட்ட மக்களும் அரச அடக்குமுறை அநீதிகளுக்கு எதிராக இறுதிக்கட்டமாக ஆயுதம் ஏநதிப்போராடி வருவதும் ஆங்கிலேயர் அறிந்ததே. அப்படியான பரந்த அறிவையும், ஆழமான அனுபவத்தையும் கொண்ட ஆங்கில நாடு ஒடுக்கப்படும் மனித வர்க்கத்தின் அவலங்களை உதாசீனம் செய்து, அவ்வர்க்கத்தினரின் ஆயுதப் போராட்டங்களை பயங்கரவாதமாக உருவகப்படுத்தியிருப்பது எமக்குக் கவலையைத் தருகிறது. இச் சட்டமானது அடக்குமுறை அரசுகளின் அநீதிகளுக்கு ஒரு கவசமாக, நியாயப்பாடாக அமைகிறது. அரசு அந்தஸ்தைப் பெறாத மக்கள் சமூகத்தினர் தமது இருப்பிற்கும் சுயபாதுகாப்புக்குமாக வன்முறை வடிவில் போராட்டங்கள் நடத்துவதற்கு இச் சட்டம் ஆப்பும் வைக்கிறது.

சட்ட ரீதியானதும், தார்மீகத் தகைமை உடையதுமாக எமது அரசியல் இலட்சியம் அமையப்பெற்ற போதும் இந்தப் பயங்கரவாதச் சட்டத்தில் அடிப்படைகளின் கீழ் எமது இயக்கமும் பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்படும் வாய்ப்பும் உண்டு. இதன் காரணமாகவே கதிர்காமர் அபார நம்பிக்கையுடன் இருக்கிறார். எமது இயக்கத்தைத் தடை செய்ய முடிவெடுக்கும் சிறப்புரிமை பிரித்தானிய அரசுடையது. இந்த நாட்டின் சட்டத்துக்கு நாம் சவால் விடமுடியாது. இலங்கையில் சமாதானமும் இன ஒத்திசைவும் நிலவ வேண்டுமாயின் எமது விடுதலை அமைப்பை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்க வேண்டாம் என நாம் பிரித்தானிய அரசிடம் வேண்டுகோளை விடுக்கலாம். ஒரு முக்கியமான ஐரோப்பிய வல்லரசு இப்போதைய சூழ்நிலையில் எமது இயக்கம் மீது தடையை விதிக்குமானால் நோர்வேயின் நடுநிலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் கடுமையாகப் பாதிக்கப்படும் என நாம் பிரித்தானிய உயர் அதிகார பீடத்துக்கு எடுத்துரைத்து வருகிறோம். நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக - பக்கபலமாக - நிற்கும் பிரித்தானியா இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சு மூலம் பிரச்சினையைத் தீர்க்க ஊக்குவிக்கவேண்டும். ஆனால் அதேவேளை, ஒருசாரார் மீது அபாண்டமான பழியைப் போட்டு அவர்கள் மீது பயங்கரவாதக் குற்றத்தை பிரித்தானிய அரசு சுமத்துமானால் அது தமிழரின் இனப்பிரச்சினையில் பாரபட்சமாக நிகழ்த்தப்பட்ட ஒரு தலையீடாகவே கருத இடமுண்டு. அத்தோடு நோர்வேயின் நடுநிலையில் எமக்குள்ள நம்பிக்கையையும் அது தகர்த்து விடும். பிரித்தானியா எமது இயக்கம் மீது தடையை விதிக்குமானால் அது எமது மக்களின் நலன்களுக்கும் அபிலாஷைகளுக்கும் பாதகமாக அமைவதோடு, தமிழரின் பேரம்பேசும் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் சிறுமைப்படுத்திவிடும். அது மட்டுமன்றி எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டால் ஸ்ரீலங்கா அரசின் விட்டுக்கொடாத கடும் போக்குக்கும் இராணுவவாதக் கொள்கைக்கும் ஊக்கம் அளிப்பதாகவே அமையும். இதனையெல்லாம் நாம் பிரித்தானிய உயர் அதிகார பீடத்துக்கும் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

இது ஒருபுறமிருக்க இங்கிலாந்திலும், இலங்கையிலும் உலகடங்கிலும் தமிழ் மக்கள் இந்த உத்தேசத் தடைக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கம் என்பதை வலியுறுத்தி, எமது இயக்கத்தைத் தடை செய்யக் கூடாது எனப் பிரித்தானிய அரசிடம் கோரிக்கைகளை விடுத்து வருகிறார்கள்.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய அரசு தடை விதித்தால் பேச்சுக்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்றும், மாறாக பேச்சுக்கள் துரித வேகத்தில் முன்னேறிச் செல்லும் என்றும் கதிர்காமர் சமீபத்தில் கூறியிருக்கிறார். ஏனென்றால் வன்முறைப் பாதையைத் துறந்து ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கியவர்களின் நிலைப்பாட்டை இத்தடை பலப்படுத்தும் என்று தெரிவித்திருக்கிறார். இது பற்றி உங்கள் கருத்து..?

*பதில்:-* புலிகளை ஒரு பயங்கரவாதப் பூதமாக உருவகித்து, பயங்கரவாதச் சிலுவையில் அவர்களை அறைந்துவிட வேண்டும் என வெறி பிடித்து அலைகிறார் கதிர்காமர். அவருக்கு சமாதானத்திலோ, இன ஒருமைப்பாட்டிலோ எவ்வித அக்கறையும் இல்லை. தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை பயங்கரவாதமாக இழிவுபடுத்தி சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகளை திருப்திப் படுத்துவதுதான் கதிர்காமரின் ஒரே நோக்கம். வன்முறையைத் துறந்து ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கியுள்ள பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் புலிகள் தடைசெய்யப்படுவதை எதிர்த்து ராஜதந்திர வட்டாரங்களில் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையில் நிலவும் அரசியல் யதார்த்த நிலைமை பற்றி கதிர்காமருக்கு அறவே புரியாது. அத்தோடு, தமிழ்த் தேசிய இனத்தின் உணர்வுகள், அபிலாஷைகள், மனநிலை பற்றியும் அவருக்கு எதுவுமே தெரியாது.

*கேள்வி:* பிரித்தானிய அரசு புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய விருப்பது குறித்து நோர்வேயின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி குறிப்பிடுவீர்களா? பிரித்தானியாவின் நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்பதால், நோர்வே அரசு உங்கள் சார்பில் ஆங்கில அரசு மீது செல்வாக்கைப் பிரயோகித்து இத்தடையை நிறுத்த முயற்சி செய்யுமா?

*பதில்:-* இந்த விவகாரத்தில் நடுநிலைமை வகிக்கவே நோர்வே அரசு விரும்புகிறது. பிரித்தானிய அரசாங்கத்தின் எந்த முடிவிலும் தாம் தலையிடப்போவதில்லை என நோர்வே அரச பிரதிநிதிகள் என்னிடம் கூறினார்கள். ஆயினும் தடைபற்றி எமது கருத்துகளையும் கவலைகளையும் பிரித்தானிய அரசுக்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். பிரித்தானிய அரசு புலிகள் மீது தடை விதித்தால் நிச்சயமாகச் சமாதான முயற்சிகள் முறிவடையும் என நான் நோர்வேயின விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் எடுத்துச் சொன்னேன். இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அழுத்தத்தின் கீழ் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக நான் லண்டனில் சுதந்திரமாகச் செயல்படுவது கடினமாக இருக்கும். எமது விடுதலை இயக்கம் மீது தடைவிதிக கப்படும் கணத்தில் இருந்து நான் மக்களின் பிரதிநிதி என்ற தகைமையை இழந்து ஒரு பயங்கரவாதத் தலைவராக மாற்றப்படுவேன். அத்தோடு எனது அரசியற் சுதந்திரங்களையும் இந்தச் சட்டம் நசுக்க முற்படும்.

எமது மக்களின் விடுதலைக்காக நான் குரலெழுப்பினாலும் இச் சட்டத்தின்படி அது பயங்கரவாதப் பிரசாரமாக அமையும். சட்டபூர்வான ஓர் அரசுக்கு எதிராகச் செயற்படும் சதியாகவும் கருதப்படும். இப்படியான பயங்கரவாதச் சட்டத்தின் கோரப்பிடியிலிருந்து நான் செயற்படுவது கடினம். எனவே நான் தலைமறைவாக நேரிடலாம்; அல்லது இந்த நாட்டில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படலாம் என நான் நோர்வே பிரதிநிதிகளுக்குத் தெரிவித்திருக்கின்றேன்.

பிரிட்டன் எம் மீது தடை விதித்தால் அது சமாதான முயற்சியைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதால் சிங்கள அரசு பிரித்தானியா மீது அழுத்தம் போட்டு வருவது அபத்தமான செயல். நோர்வேத் தூதுவர் சொல்ஹெய்ம் இதனை ஸ்ரீலங்கா அரசிடம் குறிப்பாக கதிர்காமரிடம் எடுத்துக் கூறுவது அவசியம் என நான் கருதுகிறேன். அது மட்டுமன்றி பேச்சுகள் ஆரம்பிப்பதற்கு முன்பதாக இலங்கை அரசு எம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது அவசியம் என்று சிங்கள ஆட்சியாளருக்கும் நோர்வே பிரதிநிதிகளூடாக நாம தெரிவித்திருக்கிறோம்.

தமிழரின் இனப்பிரச்சினையின் மூலவேர்கள் அந்நிய காலனித்துவ வரலாற்றிலேயே ஆழமாகப் பதிந்து கிடக்கின்றன. தமிழினம் தனது இறையாண்மையை இழக்க நேரிட்டதற்கு ஐரோப்பிய காலனித்துவ அரசுகளின் ஊடுருவல்களே காரணம். எனவே தமிழ் மக்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுக்கும் தார்மீகக் கடைப்பாடு பிரிட்டனுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் உண்டு. தமிழர்களுக்கு எவ்விதத்திலும் பாதகம் இளைக்காமல் பார்த்துக்கொள்ளவும் இந்நாடுகளுக்கு கடமை உண்டு. (உ)

## நாளை முதல்.....

(முதலாம் பக்கத் தொடாசசி)

கள் என 33 மருத்துவ் மையங்கள் குடாநாட்டில் இயங்குகின்றன. இவற்றில் நான்கு ஐந்தைத் தவிர ஏனையவை அனைத்திலும் தனித்து பதிவு மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளே பணிபுரிகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் தினமும் சிகிச்சை பெறும் வெளி நோயாளர்களில் 85 வீதமானோருக்கு இவர்களே சிகிச்சை அளிக்கின்றனர். ஆனால் அரசோ இவர்களின் சேவையைக் கணக்கில எடுக்காது புறக்கணித்து, பாரபட்சம் காட்டுகிறது.

இதனை ஆட்சேபித்து கடந்த 5ஆம் திகதி முதல் வடக்கு கிழக்கில் பணிபுரியும் பதிவு மற்றும் உதவி வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் குடாநாட்டில் பணிபுரியும் இந்த வைத்தியர்கள் எமது மக்களின் இக்கட்டு நிலையைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து சேவையாற்றி வந்தனர்.

எமது நியாயமான கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கபபடுவதால் வேறுவழியின்றி நாமும் கனத்த இதயத்தோடும் கவலையோடும் புதன் கிழமை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இணையத் தீர்மானித்துள்ளோம்.

முதற்கட்டமாக வெளிநோயாளர் பிரிவுகளில் மட்டும் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும். மிகவும் அவசியமான - தவிர்க்க முடியாத - இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையால் பாதிப்படையும் எமது மக்களுக்கு எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (உ)

## குடும்பக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் உயிர் துறக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் போர் முனைக்கு அனுப்பப்படவேண்டும். இந்நிலையில் குடும்பக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தலாமா?

எனவே சிங்கள மக்கள் மத்தியில் குடும்பக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தக்கூடாது - இப்படி அந்த அமைப்பு கேட்டுள்ளது.(உ-3)

## பிற நாடுகளிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சில் நடைபெற்றதாகவும் -

இலங்கையின் சமூக பொருளாதார செயற்பாடுகளுக்கு அந்த நாடுகளிடம் இருந்து பெறவேண்டிய உதவிகள் குறித்தும் அங்கு தூதர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.(உ-3)

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நச்சாட்டுக்களின் ஆதாரங்களில் இரண்டை முன்னெடுப்பதற்கு உயர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது என்றும் - இதன் காரணமாக வழக்கைத் தொடரமுடியாத நிலையில் தாம் அவ் வழக்கை வாபஸ் பெறப்போவதாகவும் - தெரிவித்தார். நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியது.(உ-7)

"பங்குடைமை"
A/L-2002
கணக்கீடு
D.Sam
ஆரம்பம் : 18-02-2001
ஞாயிறு மதியம் 12மணி
DMI
யாழ்.நகர். (C/15268)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
கார்த்திக் - பிரபுதேவாவின்
உள்ளம் கொள்ளை போகுதே
வடிவேலு - விவேக் - மணிவண்ணனின்
எங்களுக்கும் காலம் வரும்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(C/15270)

புதிய வீடியோ CD வெளியீடு
பிரபுதேவா, கார்த்திக்
உள்ளம் கொள்ளை போகுதே
லிவிங்ஸ்டன், தருண், வடிவேல், கௌசல்யா
எங்களுக்கும் காலம் வரும்
பிரதிகள் உடன் பெறலாம்
புதிய போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.
விஷ்ணு வீடியோ
K.K.S. Road, கோண்டாவில்.
(C/15277)

மறு பதிப்புச் செய்தல்
பல சைவ அன்பர்களின் வேண்டுதலுக்கிணங்க பின்வரும் நூல்களை மறுபதிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளோம். இந் நூல்கள் தேவையானோர்கள் முற்பதிவு செய்துகொள்க. யாராவது உரிமைக்காரர் தத்துவக்காரர்கள் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினாலும் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.
1) திருவாதவூரடிகள் புராணம் பதவுரையுடன்
ஆக்கியோன் திரு.ம.க.வேற்பிள்ளை அவர்கள்
2) கந்தபுராணம் அசுர காண்டம்
3) கந்தபுராணம் மகேந்திர காண்டம் } பதவுரையுடன்
ஆக்கியோன் சிவஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
கைதடி
தொடர்பு முகவரி:- ஆறுமுகம் கந்தையா J.P
320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி:-334004 (84040)

நேயன்ஸ் கல்வி நிறுவனம்
புதிய கல்வியாண்டு ஆரம்பம்
நாளை (14.02.2001)
புதன் பி.ப. 4: மணி
தரம் 5 முதல் O/L வரை
இடம்: 198, செல் வெஸ்டன் ரோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (84073)

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க....
மகிழ்ச்சிகரமான
மாலைநேர வகுப்பு!
A/L-2002
LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் : நாளை மாலை (புதன்) 3.30 மணி
பகுதி I உம், II உம் சமகாலத்தில் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
BEACON
யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி)
(84088)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.